புதுவாழ்வு

ஆசிரியர். க. அன்பழகன், M.A.

புதுவாழ்வு

மாலை 1	திருவள்ளுவர் ஆண்டு 1979 பங்குனி1.	மலர் 3

ஆசிரியர் :—க. அன்பழகன் எம். ஏ.,

துணை ஆசிரியர்:—கே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

தீர்ப்பு கூறுங்கள்	...	2
தமிழாசிரியர்களுக்கு	...	7
களஞ்சியப்பணி	...	9
தேட முடியுமே	...	13
மாதரசி கியூரி	...	21
ஒலிக்கும் சிலம்பு	...	29
நிர்மலா	...	23
மதிப்புரை	...	40

10, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை-7.

விலை அணா 4

15-மார்ச்சு
1948

புதுவாழ்வு

தீர்ப்பு கூறுங்கள்

சென்னை அரசாங்கம், நீண்ட நேரம் தூங்கிவிட்டுத் திடுக்கிட்டுத் திடீரென விழிக்க நேர்ந்தவன் மாலையைக் காலையென்று மயங்குவதுபோல், 'கருப்புச் சட்டைப் படை'யை ஒரு நாள் மாலை (2-3-48 அன்று) திடீரெனத் தடை செய்துள்ளது.

உண்மையில் அரசாங்கம் எதைத் தடை செய்துள்ளதோ அது இல்லை. 'கருப்புச்சட்டை படை' என்ற ஒரு அமைப்பு இல்லை. படைக்குரிய பயிற்சியும், அணிவகுப்பும் இல்லாதது ஒரு புறமிருக்க படையில் ஆட்களே இல்லை. படை ஒன்று அமைக்கப்பட்டால் அதில் சேர விரும்பியவர்களாகப் பலர் இருந்தனர். படையென்ற பெயரும் இருந்தது. படை அமைந்தால் 'கருப்புச்சட்டை'தான் அதன் உடையாக இருக்கவேண்டும் என்ற கருத்தும் இருந்தது. ஆனால்படை அமைக்கப்படாத காரணத்தால்தான், அந்தக்கருப்புடையை, விரும்பியவர்களெல்லாம் அணிந்துகொள்ளத் தலைப்பட்டனர்.

இவ்வாறு ஒரு படை சரியான அமைப்பில் ஏற்படுத்தப்படாமல், கருப்புச் சட்டைப் படை என்ற பெயர் மட்டும் வழங்கப்பட்டு வந்த காரணத்தால்தான் இயக்கத்தின் வாலிபத்தோழர்கள் சிலர், இயக்கத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களோடுகூட கருத்து வேறுபட்டார்கள். வாலிபர்கள் கூறிய குறையெல்லாம் படை அமைக்கப்படவில்லை என்பதுதான். தலைவரவர்களோ, கருப்புடையை ஒரு கொள்கையின்-குறிக்கோளின் அடையாளமாகக் கொண்டாரேயன்றி, படையின் உடையாகக் கொள்ளவில்லை. அதனால்தான் தாய்மார்களும், குழந்தைகளும், கிழவர்களுங்கூட, குடும்பம் குடும்பமாகக் கருப்புடை அணிந்திருந்தனர். கருப்புச் சேலையும், துண்டும், சட்டையும், ஜாக்கெட்டும், பனியனும், கைக்குட்டையுமென எதை வேண்டுமானாலும் அடையாளமாகக் கருதி அணிந்திருந்தனர். இந்த நிலையில் உள்ளவர்கள் படையென்று

வழங்கப்படுகின்ற காரணத்தாலேயே ஒரு படையாகி விடுவரா? என்பதை எண்ணிப் பாருங்கள்.

கருப்புச்சட்டைப் படை மாநாடுகள் நடைபெற்றனவே யென்றாலும், அம் மாநாட்டிலும் திராவிடர் கழகத்தின் கொள்கைகளும், திட்டங்களும், விளக்கப்பட்டு, விரிவுரைகள் நிகழ்ந்தனவே யன்றி, படைக்குரிய பேச்சு எதுவும் நடைபெறவில்லை என்பதை அரசாங்கம் தனது ஒற்றர்கள்மூலம் அறிந்திருக்க வேண்டும். படைபோல ஊர்வலத்தில் அணி வகுத்து நடந்தனரே யென்றால், தலைவர் பெரியார் அவர்களின் விருப்பத்திற்கிணங்க, ஒரு ஒழுங்கு முறை ஊர்வலத்தில் நிலைநாட்டப்பட - எதிரிகளால் கலகம் விளைய இடந்தராமலிருக்க - போக்கு வரவு ஊர்வலத்தால் தடைபடாமலிருக்க, கருப்புடை அணிந்தவர்களெல்லாம் ஒரு வரிசையாக அமைந்து நடந்தனரேயன்றி, அது ஒரு படையெடுப்பு என்ற எண்ணத்தோடு அல்ல. அதிலும் மதுரையில் நடைபெற்ற கலகத்தையும், அதன் விளைவையும் அறிந்தவர்கள், பதினாயிரக் கணக்கில் கூடியிருந்த கருப்புச்சட்டையினர் ஒரு படையாக இருந்தால், காலிகள் நடத்திய அந்தக் கொடுமைகளை அந்த அளவிற்குப் பொறுத்துக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள் என்பதை அறிவார்கள்.

எனவே, அப்படிப்பட்ட இல்லாததொரு படையை, நாட்டின் நலனுக்கு ஏற்றதல்ல என்று அமைச்சர்கள் கூடிப் பேசி, கருப்புச்சட்டைப் படை பொது மக்கள் அமைதிக்குக் கேடு விளைவிக்குமென்று கூறி, கிரிமினல் சட்டத் திருத்தம் 16வது பிரிவின் கீழ் தடையுத்தரவு பிறப்பித்துள்ளனர்.

தடை பிறந்ததும் அரசாங்கப் படை தன் வேலையைத் தொடங்கிற்று. கருப்புச்சட்டை அணியும் மக்களின் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் வீட்டிலிருந்து திராவிடர் கழகத் தொண்டர்கள் வீடுகள் வரையில், நாடெங்கும், ஊரெங்கும், சோதனைகள் நடைபெற்றன. போன இடங்களிலிருந்து வெறுங் கையோடு திரும்பவில்லை அதிகாரிகள். அகப்பட்ட கருப்புத் துணிகளை- அவை சட்டையானாலும், ஜாக்கெட்டானாலும், ஜரிகைக் குட்டையானாலும், கொடியானாலும், கைப்பையானாலும் குடை தவிர்த்து பிறவற்றைக்- கைப்பற்றியுள்ளனர். இன்னும் சில இடங்களிலிருந்து பகுத்தறிவு ஏடுகளையும் எடுத்துச் சென்றுள்ளனர். எடுத்துச் சென்ற புத்தகங்களைப் பார்த்தால், அறிஞர் அண்ணாதுரை, கவிஞர் பாரதிதாசன் இவர்கள் எழுதியதாக இருப்பதால், ஒருவேளை இவர்களுடைய பெருமையைக் கேள்விப்பட்டிருந்த போலீஸ்காரர்கள் படிப்பதற்கு ஆசைப்

பட்டு எடுத்துச் சென்றிருப்பார்களோ என்றுகூடத் தோன்றுகிறது.

சோதனை நடவாத இடமும் இல்லை. ஆனால் அகப்பட்ட அபாயமான பொருளுமில்லை. யார் குற்றவாளிகள் என்று கருதப்பட்டனரோ, அவர்களிடம் குற்றம் காணப்படவில்லை. மேலும் பெரியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இயக்கத் தோழர்கள், போலீஸ் சோதனையின் போதும் பொறுமையோடும், அமைதியோடும் நடந்துகொண்டுள்ளனர்.

பிறகு அமைதியைக் குலைக்கக்கூடியவர்கள்? தாங்களே அமைதியாக இருப்பதைக் கண்டு போலீசே ஆச்சரியப்பட்டிருக்கலாம். அதன் விளைவுதான் போலும், போலீஸ் மந்திரி டாக்டர் சுப்பராயன், அவர்கள் திருவண்ணாமலைக்கு வந்தநாளில், நமது தோழர்களிற் சிலர் கருப்புச் சட்டை அணிந்திருந்தவர்களாய்க் கூடிப் பேசி நின்றிருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற ஊர்களில் உள்ள தோழர்களும், உணவுக்குத் தேவையான பொருள் கிடைக்க வழி செய்யாவிட்டாலும், வாழ்க்கை நலனுக்கான உரிமைகளைப் பறிக்கச் சட்டம் செய்து வைத்துக்கொண்டுள்ள அரசாங்கத்தின் விருந்தை எதிர் நோக்கியுள்ளனர்.

ஒரு அரசாங்கம் எதைச் செய்வதானாலும் நன்றாகச் சிந்தித்தே ஒரு முடிவுக்கு வர வேண்டும். அரை குறை விசாரணையின் பேரில் கூறும் தீர்ப்பு தேவையுமல்ல, நல்லதுமல்ல. இன்றுள்ள சூழ்நிலையில், எதை வேண்டுமானாலும் அடக்குவது, ஒடுக்குவது, தடுப்பது என்று அரசாங்கம் கொள்ளும் போக்கை, தியாகி காந்தியாரின் மறைவுபற்றிய திடுக்கிட்ட உணர்ச்சியிலிருந்து விடுபடாத மக்கள், முற்றிலும் உணரமாட்டார்கள் என்று கருதுகிறது போலும் அரசாங்கம்.

தன் தந்தையை நஞ்சிட்டுக் கொன்ற மடைப் பார்ப்பானின் (சமையல்கார சாத்திரியின்) தமையனை புரோகிதனிடமே தன் தந்தை இறந்ததற்குத் திவசம் செய்து காசு கொடுத்தனுப்பும் செயல்போல, அரசாங்கம் காந்தியைக் கொன்ற பார்ப்பானை கோட்சேயும் அவனது கூட்டமும் குலமும் இடம் பெற்று ஆதிக்கம் செலுத்திய அந்தக் கட்சியை ஒழிக்க முனையாமல், அந்தக் கட்சியின் போக்கிற்கு நேர் மாறான பாதையில் செல்வதோடு மட்டுமின்றி, அதன் கருத்துக்களை மறுத்து, மத வெறியற்ற நல்லுணர்வு ஊட்டி வரும் கட்சியான திராவிடர்க் கழகத்தின் மீது பாயத் தொடங்கியுள்ளது.

அன்று ஆச்சாரியார்-அவரே-பாய்ந்து பார்த்தார். பல்லு

டைத்துக்கொண்டார். இன்று ஓமந்தூராரைப் பாயச் செய்கிறார்கள். அவர் பாய மறுப்பதைக் கண்டு - தயங்குவதைப் பார்த்து, அந்தக் குள்ளநரிக் கூட்டம அவர்மீது பாய்கிறது, அவரது பதவியை உறிஞ்சிக் கொள்ள.

அரசாங்கம் மதமற்றதாக இருக்கவேண்டுமானால், மக்களும் மத உணர்ச்சி அற்றவர்களாகவேண்டும். தென்னாட்டைப் பொறுத்தவரையில் - தமிழ் நாட்டில் - திராவிடர் கழகமே அந்த அரும்பணியை ஆற்றி வருகிறது. அதன் பணியை வளர விடாமல் தடுப்பதே இன்றைய மத நோக்கத்தை மறைத்து வைத்துக்கொண்டுள்ள சர்க்காரின் நோக்கமாகத் தோன்றுகிறது.

அந்நோக்கம் நிறைவேற வேண்டுமானால், அடிமைப்பட்ட திராவிடத்தின் சிறையில் கிடந்து கர்ஜித்துக்கொண்டுள்ள, சிறைக்கஞ்சா சிங்கமாகிய பெரியாரின் தலைமையிலேயே நடைபெறும் திராவிடர் கழகத்தையே தடை செய்தாக வேண்டும். அதை விட அறிவு வளர்ச்சிக்கே ஒரு தடை விதித்து, உள்ள கல்லூரிகளையும், நடைபெறும் பள்ளிக்கூடங்களையும் இழுத்து மூடிவிட்டு, புத்தகங்களுக்கே ஒரு தடைபோட்டுவிட்டு, கல்வி மந்திரியைத் தன் இடத்தைக்காலி செய்து விடச்செய்து விட்டால் காரியம் சுலபமாகி விடும்.

அதை ஆரியர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்களே யென்றால் வேறொரு வழியுமுண்டு. ஒரே வரியில் 'சூத்திரர்கள் இனி எக்காரணத்தைக் கொண்டும் வேதஆகம விதிகளுக்கு விரோதமாக ஒரு எழுத்தும் படித்துக் கொள்ளக் கூடாது' என்று ஒரு சட்டம் செய்து விட்டால், இனி அத்தொல்லையே இருக்காது. அதற்குத்தான் தடையாகக் கருங்கல் மாதிரி ஓமாந்தூர் இராமசாமி உட்கார்ந்துகொண்டுள்ளாரேன்று தோன்றும் ஆரியத்துக்கு. அதனால்தான் போலும் கண்ணியமிக்கஓமாந்தூராரையே கவிழ்த்துவிடச்சதி நடக்கிறது!

மந்திரி சபை மாறினால்- பிரகாசராயர்களின் கூட்டாட்சி தோன்றுமானால் - ஒரு வேளை இந்த முறைகளைக் கையாளுவார்களோ என்னவோ நாமறியோம். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. அவர்கள் அடக்குமுறையைக் கையாளுவதின் மூலம், மக்களின் உள்ளம் வேறு பக்கந்தான் திரும்பித் தீரும் என்பதை மறந்துவிடக்கூடாது.

எந்த நோக்கத்துக்காக மாறுபட்ட கட்சிகள் இருக்கக் கூடாது என்று கருதினாலும்- தேர்தலில் போட்டியிடக்கூடிய கட்சிகளை ஒடுக்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டாலும் - அதை நிறைவேற்றுவது இயலாது. புதுப்புதுப் பெயர்களில் புதுப்புதுக் கட்சிகள் தோன்றியவண்ண மிருக்கும்,

வெளியிலிருந்து மட்டுமல்ல - காங்கிரசுக்கு உள்ளே யிருந்தும் அப்படியே அழிவு வேலையைத் தொடர்ந்து நடத்துவதானாலும் அது அவர்களது பலமற்ற-தம் கொள்கையில் நம்பிக்கையற்ற-தன்மையையே வெளியிடுவதாகும். ஒரு கட்சி ஆட்சியே நிலவினால், எதிர்க்கட்சியே இல்லாமற்போனால், அது எவ்வளவு பெரிய அறிஞர்களைக் கொண்டிருந்தாலும், காட்டாட்சியாகத்தான் இருக்கமுடியும். உலகினரின் ஏளனத்துக்கு- மற்ற நாட்டவர்களின் கேலிக்கு ஆளாகித் தீரும். இதைத்தான், காங்கிரஸ் தோழர்கள் - மந்திரிசபையின் போக்கை மனதிலே கொண்டு- எண்ணிப்பார்க்க வேண்டும்.

எந்தக்கட்சினர் நேற்று வரையில் வாய் சலிக்காமல், உரத்த குரலெடுத்து உலகமதிர நாட்டுரிமை, சமூக உரிமை, மனித உரிமை, பேச்சுரிமை என்பவை குறித்து இடைவிடாது பேசி வந்தார்களோ அவர்களது ஆட்சியில்தான் இன்று மக்கள் உரிமை மதிக்கப்படவில்லை. அதனால்தான் இப்படிப்பட்ட தடை உத்திரவுகள் மற்றும்பல அமைப்புக்களுக்கும் போடப்பட்டுள்ளதோடு, அடக்குமுறை சட்டங்களும் புதிது புதிதாக உருவாக்கப்படுகின்றன.

இந்நிலையில், இல்லாத படையை இருக்கின்ற அரசாங்கம் தடை செய்து, தேவையற்ற சோதனையைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் நடத்திப் பார்த்து, அசோகவனத்தில் சீதையைக்கண்ட அநுமான் கணையாழியை அடையாளமாகப் பெற்றதுபோல, கருப்புச் சட்டைகளை அடையாளமாகக் கைக்கொண்டு, குற்றமற்ற இளைஞர்களைக்கூண்டிலே நிறுத்தி, அடக்குமுறை தர்பார் நடத்துகின்றது. அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களே தனது வானொலிப் பேச்சில் குறிப்பிட்டதுபோல் அமைதியையே நோக்கமாகக்கொண்டு அரும்பணியாற்றும் கட்சிகளையே பெரிதும் கொண்ட இந்நாட்டில், இந்த அடக்குமுறைகள்- தடையுத்திரவுகள் அர்த்தமற்றன.

"ஆட்டுவார் ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே" என்றபடி நம் திராவிடத்தின் வாழ்வையே ஆட்டிப்படைக்கும் கூட்டமே இன்றைய ஆளவந்தார்களையும் ஆட்டிவைக்கிறது என்பதையும் நாடு உணர்கிறது.

ஆனவரையில் ஆட்டிவைக்கட்டும். ஆனால் ஆட்டம் காண்பது நமக்கல்ல என்பதை உணரட்டும். உணரத்தவறினால் விளைவை அநுபவிக்கட்டும். ஆனால் இத்தடையுத்தரவு நியாயந்தானா என்பதைத்தான், பொதுமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாம் கேட்பது பார்ப்பனர்களையல்ல, மற்றவர்களை - எக்கட்சியினரானாலும்பொதுநோக்குக் கொண்டவர்களை. நியாயந்தானா? தீர்ப்பு கூறுங்கள். வெளியே கூறமுடியா விடினும் உங்கள் மனதிற்குக்கூறுங்கள்.

தமிழாசிரியர்களுக்கு

எல். டி. சம்பளம் !!!

தமிழாசிரியர்களின் நிலையோ வறுமையின் இலக்கியமாக உள்ளது. அந்நிலைக்கு ஆளாகியுள்ள தமிழாசிரியர்கள் இரண்டாண்டுகளுக்கு மேலாகவே தங்களது நிலை உயர்த்தப்பட வேண்டுமெனக் கேட்டு வருவதோடு அதற்காக இரண்டு பெரிய மாநாடுகளும் கூட்டி விட்டனர்.

தமிழாசிரியர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்பதோடு அந்த ஊதியம், அவர்களுடைய இன்றைய தாழ்வை நீக்கிப் பிற ஆசிரியர்களோடு சமத்துவம் அளிப்பதாக இருக்கவேண்டும்.

நேற்றுவரை, ஆங்கில ஆசிரியரே முதன் மொழியாசிரியர்களாக இருந்தனர். இன்றோ தாய்மொழிகள்—முதல் மொழிகள் ஆகிவிட்டதால், முதல்மொழி ஆசிரியர்களான—தமிழ் ஆசிரியர்களும் முதன் நிலையை-உயர் நிலையைப் பெற வேண்டுவது முறையே யன்றோ ?

தமிழாசிரியர்கள், எந்தந்த இடங்களில் வேலை பார்க்கின்றனரோ அந்தந்த இடங்களில் உள்ள பிற ஆசிரியர்களுக்குஅளிக்கப்படும் ஊதியமே, அவர்களுக்கும் அளிக்கப்படவேண்டும். எடுத்துக்காட்டாக-ஒரு உயர் நிலைப்பள்ளியில் உள்ள தமிழாசிரியருக்கு எல். டி. சம்பள விகிதமும், ஒரு நடுத்தரப்பள்ளியில் உள்ளவருக்கு; செகண்டரி கிரேடு ஆசிரிருக்குரிய சம்பள விகிதமும் வழங்க வேண்டும்.

தமிழாசிரியர்களின் இந்த வேண்டுகோளுக்கு-முதலில் செவி சாய்க்கவும் மறுத்து, தமிழாசிரியர்களைக் கேலிசெய்த அமைச்சர்அவர்கள் நாடு முழுவதும் 'துக்கவாரம்' கொண்டாடி பொதுமக்களின்பேராதரவைப் பெற்ற பின்னால்-அதைப்பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டார். எனினும் குறை இன்னும் நீக்கப்படவில்லை.

அண்மையில்வெளியிடப்பட்டஒரு அறிக்கையின்படி – உயர்நிலைப்பள்ளிகளில், 'வித்துவான்' பட்டத்தோடு 15-ஆண்டுகளுக்குமேல் தொண்டு செய்திருப்பினும், செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றிருப்பினும், அவர்கள் மட்டும், எல். டி. விகித ஊதியத்திற்கு உரியர்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது போகாத ஊருக்கு வழியாகும்.

இதனால் நன்மை பெறுபவர்கள் நூற்றுக்கு ஒரிருவரே யாவர். ஏனெனில், 1929-ல் வித்துவான் பட்டம் ஏற்படுத்தப்பட்டு நீண்டகாலம் ஆகாமையானும், தமிழாசிரியர்களுக்கு, ஆங்கிலக்கல்வியோ, ஆசிரியப்பயிற்சியோ வற்புறுத்தப் படாமையானும், மேலே காட்டிய தகுதிகளைப் பெற எந்தத் தமிழாசிரியரும் முயற்சிக்கவே இல்லை. எனவே பெரும்பாலோர் பெற வேண்டுமென்று எண்ணவும் வாய்ப்பற்ற தகுதியைக்காட்டி, அவர்களுக்கு எல். டி. சம்பளம் என்பதாலேயே தமிழாசிரியர்களுடைய வேண்டுகோள் நிறைவேறிவிட்டதாகப் பொதுமக்களை ஏமாறச் செய்வதைவிட தமிழாசிரியர்களுக்கு எல். டி. சம்பளம் கொடுக்க வழியில்லை என்று கை விரித்து விடலாம்.

மேலும் அவர்கள் பெற்றிருக்க வேண்டிய 15-ஆண்டு தொண்டும் ஒரே பள்ளியில் இருக்கவேண்டுமாம். இரண்டு மூன்று பள்ளிகளில் தொ

டார்ந்து உழைத்திருந்தாலும், 15-ஆண்டுகள் நிறைவேற 15-நாட்களே மிச்சமிருப்பினும் அது பயனளிக்காது. குறிப்பிட்ட ஒரு நாளுக்குப் பின்னால், 15-ஆண்டுகள் நிறையப் பெறுபவர்கட்கும் இந்த உயர்வு இல்லை. இதற்குப்பெயர்தான் தமிழாசிரியர்களுக்கு எல். டி. சம்பளம்!

கல்வி அமைச்சர், புரிந்தோ புரியாமலோ கொண்டுவந்துள்ள இத் திட்டத்தால் பெரு நன்மையடைபவர்கள், இறந்த வடமொழியை இழுத்துவைத்து மாரடிக்கும் சமஸ்கிருதப் பண்டிதர்களே யாவார்கள் நூற்றுக்கு எண்பது சமஸ்கிருதப் பண்டிதர்களும்- 'சிரோன்மணி' பட்டத்தோடு 15-ஆண்டுகளுக்குமேல் ஆசிரியர்களாக உள்ளவர்கள். எனவே -தமிழாசிரியர்களின் பெயரால், பயனற்ற வடமொழி ஆசிரியர்கள் எல்.டி. சம்பளம்பெற வழி செய்யப் பட்டுள்ளதோ என்று ஐயுற இடமேற் படுவதோடு, கல்வி அமைச்சர்தான் இன்றளவும் சமஸ்கிருத சுலோகம் சொல்லிக் கடவுள் பூசை செய்பவராயிற்றே வேறென்னசெய்வார் என்று வருந்தவும் வேண்டியுள்ளது.

இந்த முறையில் தமிழாசிரியர்களுக்கு எல். டி. சம்பளம் என்று தமிழ்நாட்டு ஏழை மக்களின் வரிப் பணத்தைப் பாழாக்குவதை விட, இந்த முறையை மாற்றப் போவதில்லையானால், எல். டி. சம்பளமே வேண்டாம் என்றுதான் கூறத் தோன்றுகிறது.

உண்மையாகவே, தமிழாசிரியர்களின் நிலையை உயர்த்த விரும்பினால், கீழ்க்கண்டவைகளைச் செய்தாக வேண்டும். விரைவில் தமிழ்மாகாணம் அமையப் போவதால், தமிழாசிரியர்களையும் பிறமொழியாசிரியர்களோடு சேர்த்துக் கருதாமல், தனியே, முதல்மொழி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.

மற்றும், பி. ஓ. எல். பட்டம் மட்டுமே பெற்றவர்களும், ஒரே பள்ளியிலில்லையாயினும்; 'வித்துவான்' பட்டம் பெறவிடினும், 15-ஆண்டுகள் தொண்டாற்றியவர்களும், வித்துவான் பட்டம் பெற்று 10- ஆண்டுகள் தொண்டாற்றியவர்களும், ஆசிரியப் பயிற்சியும் பெற்று 5- ஆண்டுகள் தொண்டாற்றியவர்களும், அந்தக்கால அளவையை அவரவரும் எய்தும்போது எல். டி. சம்பளத்திற்கு உரியவர்களாக்கப்பட வேண்டும். மற்றவர்களும், எல். டி. சம்பளம் பெறும்படியாக விரைந்து தகுதி பெறும் வகையில் - கோடை விடுமுறையில் ஆசிரியப் பயிற்சிபெற திட்டம் காணவேண்டும். ஒரு ஐந்தாண்டு காலத்திற்குள் - இன்று தமிழாசிரியர்களாக உள்ள எல்லோருமே எல். டி. சம்பளம் பெறும்படி திட்டம் செய்துவிட்டு; இனி புதிதாக, ஆசிரியர்களாக வருபவர்கட்கு வேண்டுமானால் வித்துவான் பாடத் திட்டத்தை மாற்றியமைத்தோ, ஆங்கிலக் கல்வியை வற்புறுத்தியோ, ஆசிரியப் பயிற்சியைக் கட்டாயமாக்கியோ - தகுதியை உயரச் செய்யட்டும். இவற்றைச் செய்யாமல் வெறும் கண் துடைப்பு வேலை பயனளிக்காது.

மிஞ்சினால் கெஞ்சுவதும், கெஞ்சினால் மிஞ்சுவதும் - தமிழாசிரியர்கள் வழக்கமல்ல. எல். டி. சம்பளம் கிடைக்காவிடினும், உடனே கடலிலே குதித்து உயிரை விட்டு விடப்போவதில்லை. நிலையற்ற அமைச்சர் பதவியில் இருப்பதை எண்ணியேனும் நிலையான நன்மை தரும் ஒரு திட்டத்தைக் கல்வி அமைச்சர் நிறைவேற்றட்டும். இல்லையானால், " ஆண்டவன் " விட்டவழி இருவருக்கு மாகட்டும்.

களஞ்சியப் பணி

க. அன்பழகன்

தமிழிலே, ஒரு களஞ்சியத்தைத் தோற்றுவிக்கும் அரும்பணியைத் தொடங்கியுள்ளார் நமது கல்வி அமைச்சர். தமிழ் மொழியின் ஒரு பெருங் குறை, இதனால் தீர்ந்து விடும் என்ற எண்ணத்தால் நாம் மகிழ்வதும் இயற்கைதான். என்றாலும், களஞ்சியம் உருவான போதன்றோ- அதன் பயனை மக்கள் கண்டறியக்கூடும்!

மேல் நாட்டில் வழங்கும் எல்லா மொழிகளிலுமே இத்தகைய பல் பொருள் அகர வரிசைகள், அறிவுக் களஞ்சியங்கள் பலப்பல ஆண்டுகளுக்கு முன்பே தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவை அந்தந்த நாட்டு மக்களின், பொது அறிவு வளர்ச்சிக்கும், உலகியல் தெளிவிற்கும் பெருந்துணையாகின்றன.

தமிழ் மொழியிலேயோ, அகர வரிசைகளும் நிகண்டுகளும் மட்டுமே இதுகாறும் தோன்றியுள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்புதான், திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் என்ற தமிழ்ப் பெரியார் ஒருவரின் பெருமுயற்சியால் 'அபிதான சிந்தாமணி' என்ற பெயர் கொண்ட 'தமிழ்மொழிக் களஞ்சியம்' ஒன்று தொகுக்கப்பட்டு வெளிவந்தது என்றாலும், அதைக் கலைக் களஞ்சியமாகக் கொள்ள முடியாது. இருபதாம் நூற்றாண்டின் வளர்ச்சியுற்ற அறிவியல் அதில் இடம் பெறுவது இயலாததேயன்றோ! எனினும் அஃது ஒரு தனிப்பட்டவரின் பெரு முயற்சியின் விளைவு என்பதை எண்ணும் எவரும் பாராட்டாமலிரார்.

நம் நாட்டு மக்களோ அறிவுத் துறையில் ஈடுபாடின்றி, புராணத் துறையிலேயே புகுந்து கிடந்ததால், களஞ்சியத்தின் அவசியத்தைக் கூட உணர்ந்தபாடில்லை.

இந்தப் புண்ய பூமியிலே பிறந்த கடவுள் அவதாரமான இராமனே கண்டறியாத, கேட்டறியாத புதுமைகளை, இன்று வாழும் விஞ்ஞான இராமன்கள் கண்டு பிடித்துள்ளனர். பொது மக்களோ விஞ்ஞான இராமன்களின் கண்டு பிடிப்புக்களை அறிந்துகொள்ளும் ஆற்றலும், ஆர்வமும் அற்றிருப்பதோடு, இன்னும் இராமபக்தியிலிருந்தோ, இராமன் காலத்து எண்ணத்திலிருந்தோ கூடத் தங்களை விடுவித்துக் கொள்ளவில்லை.

அறிவியல் பாடங்களைப் பல் கலைக் கழகங்களில் பயின்று பட்டம் பெற்றவர்களிலேயே பலருக்கு 'அறிவியல்' கல்லூரிப்பாடம் மட்டுந்தான். வாழ்க்கையோ, பழைய வளைவு நெளிவுகளுடனேயே,புராண போதையுடனேயே நடைபெறும்.

இந்நிலையில், அறிஞர்களைப் பார்த்தும் பொது மக்கள் தம் வாழ்க்கை

யைப் புதுப்பித்துக் கொள்ள வழியில்லை. அறிஞர்கட்கும்-பொதுமக்கட்கு மிடையிலேயோ, மிகப் பெரியதொரு இடைவெளி. இந்த இடைவெளி குறுகினுலன்றிப் பொதுமக்கள் அறிவியல் கருத்துக்களை அறிந்து கொள்வது எவ்வாறு?

இந்த இடைவெளி நிலைத்ததற்கு, இந்நாட்டுக் கல்வி முறையும் ஒரு காரணமாகும். இது காறும் இந்தத் துணைக்கண்டமே அந்நியர் ஆட்சிக்கு ஆட்பட்டிருந்ததால் அவர்கள் மொழியாகிய ஆங்கிலமே கல்வித்துறையில் முதல் மொழியாக, அறிவியற் கல்வி பயிற்றும் மொழியாக இருந்து வந்துள்ளது. இன்றே நாட்டு மக்களிலேயே சிலர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துவிட்டனர். இனி ஆங்கிலம் முதல் மொழியாக இருப்பதற்கில்லை. அவ்வப்பகுதிகளில் வழங்கும் நாட்டு மொழிகளே அவ்வவ்விடத்தும் முதன் மொழிகளாகும். அந்த முதன்மொழிகளில்தான் 'அறிவியல் பகுதியும்' பயிற்றுவிக்கப்படவேண்டும். இளைஞர்கள் தாய் மொழிகளில் அறிவியல் கருத்துக்களைப்பயிலும் போதுதான் அவர்களுடைய எண்ணத்திலேயே அறிவியலும் இடம் பெறும். பழைய புராண மனப்பான்மை அகலும்; புதிய உள்ளம் தோன்றும், வளரும், நிலைபெறும்.

எனவே அறிவியல் நூல் அனைத்தும் தமிழிலே வெளிவந்தாக வேண்டும். தமிழிலே இத்தகைய மறுமலர்ச்சி ஏற்பட, அறிவியல் கருத்துக்கள் மக்கள் மனதிலே மலர, ஒரு நிலைக்களனாக, துணையாக, கருவியாக, இக்கலைக் களஞ்சியம் அமைய வேண்டும்.

உணர்வியல் பகுதிகளே மிகுந்துள்ள தமிழ் மொழியில் அறிவியல் நூல்கள் பெருகவும், புராணக் கருத்துக்களையே பயின்று வந்துள்ள மக்கள் புதுமைக் கருத்துக்களை அறியவும் - இக்களஞ்சியம் பயன்படவேண்டும். அவ்வாறின்றிப் புராணக் கருத்துக்களையே தாங்கி நிற்பதாக அமையுமானுல் இக்களஞ்சியம் தரவேண்டிய பயனைத் தராதொழியும்.

இதற்கு முன்பும் நடைபெற்றுள்ள சில தமிழ்மொழிப் பணிகளைக் கருதிப்பார்க்கும் எவரும் ஐயுறுமலிரார். பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்ட தமிழ்ப்பேரகராதியோ—பேரினுல் மட்டுமே தமிழகராதியாக அமைந்து, தமிழுக்கே இழுக்காகக் காட்சியளிக்கின்றது. அந்தப் 'பெருமை' அந்தப் பேரகராதிக் குழுவில் இடம் பெற்றுத் தலைமைதாங்கி செயல் புரிந்தவர்களான திருவாளர்கள் K.V. கிருஷ்ணசாமி ஐயர், P.S. சிவசாமி ஐயர், S வையாபுரிப்பிள்ளை ஆகியோர்க்கே உரியதாகும். அந்த அகராதியிலே ஒரு எடுத்துக் காட்டு, அதை வெளியிட்ட குழுவினரின் மனப்பண்பை விளக்க. தமிழ் நாட்டிலே, தமிழர்களின் தாய்மொழியிலே வெளிவந்த பேரகராதியிலே 'தமிழர்"—என்ற சொல்லுக்குப் பொருளாகத்—தம்ளர் — டம்ப்ளர், அதாவது நீர் குடிக்கும் குவளை என்று எழுதப்பட்டுள்ளது, அந்தத் தருக்கர்களால். முதலில் 'தமிழர்' என்ருல் தமிழ்நாட்டார் என்ற விளக்கம் தந்திருப்பர், அதற்குப் பின்பே மற்ெருரு பொருளாக இதையும் எழுதியிருப்பர்" என்று சிலர் எண்ணக்கூடும். அப்படியும் எழுதவில்லை. மற்றும், டம்ளரைத்-தமிழர் என்று கூறும் அளவுக்குத் தமிழ் நாட்டார் இன்னும் தாழ்ந்து விடவில்லை. தமிழரைக் கேலி செய்யும் தமிழ்நாட்டுத் தமிழரல்லா

தாரைத் தவிர்த்து வேறு எவரும் இத்தகைய குதர்க்கத்தில் ஈடுபடத் துணியார். இன்னும் பல எடுத்துக் காட்டுக்கள் தரலாம் அதன் 'தமிழ்ப்பழியை' விளக்க.

அண்மையில் நடந்த மற்றொரு முயற்சி, தமிழ்க்கலைச் சொற்கள் தயாரித்ததாகும். அம்முயற்சியோ திருவாளர்கள், V. S. சீனிவாச சாத்திரி, T. S. திருமூர்த்தி, சுவாமி ஞானியார் ஆகியோரின் உள்ளெண்ணப்படி உருவாயிற்று. அதில் வடமொழிச் சொற்கள் அதிகம் இடம் பெற்றுள்ளதைக் கண்டு தமிழறிஞர்கள் கிளர்ச்சி செய்தபின், அவர்களிற் சிலரே அக்குழுவில் நியமிக்கப் பட்டனர். அவர் நல்ல தமிழ்க்கலைச் சொற்களை யெல்லாம் தொகுத்துக் கொடுத்தனர். பழைய பெருச்சாளிகள் அவற்றை விரும்பவில்லை. அக்குழுவினருள் ஒருவர் கல்வி அமைச்சரிடமே சென்றார். அமைச்சரும் தமிழ்ச் சொற்களே இடம் பெறவேண்டும் என்பதே என் விருப்பம் என்று வாய்ச் சொல்லாக மட்டுமின்றி எழுத்து மூலமாகவும் தெரிவித்தாராம்.

அவ்வளவுக்குப் பின்பும், ஆதிக்கம் பெற்ற கூட்டம் தனது கைத்திறனைக் காட்டத் தவறவில்லை. பட்டியலைப் பார்த்தால், குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது போலக் காட்சியளிக்கின்றது தமிழ் மணமலரொடு, மணமற்ற வடமொழிச் சருகும் சேர்த்து மாலை தொடுத்தனர் திருமூர்த்தி கூட்டத்தார். மணவீட்டிலே, மணவரையிலேயே, பிணத்தினைக் கொண்டுவந்து கிடத்துவதுபோல, செத்த வடமொழிச் சொற்களுக்குத் தமிழ் மொழிப் பட்டியலிலே இடந்தேடும் இழிசெயலைப் படித்த புரோகிதக் கூட்டம் செய்யத் தவறவில்லை.

எனவேதான், களஞ்சியப்பணி யாதாகுமோ? என்ற கவலை தமிழன்பர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தமிழர் நிலை தமிழ் மொழிப் பணி குறித்தே கவலையுறவேண்டிய தாகி விட்டது. களஞ்சியமேனும் வடசொற்களாகிய பதர்கள் கலவாமல் காக்கப்பட வேண்டும்.

புராணக் கருத்துக்களுக்கு இடமிருந்தால் அறிவு வளர்ச்சிக்கு இடமிருக்காது. வடமொழியை நுழைக்க இடமிருந்தால்—அது தமிழ்க் களஞ்சியமாகவே உருப்பெறாது.

களஞ்சியமென்றால்—அதில் எல்லாச் செய்திகளும் இடம் பெறத் தானே வேண்டும் என்று கேட்கலாம். 'கலைக் களஞ்சியம்' என்ற பெயர் உண்மையானால், எவை உண்மையில் கலைகளோ அவைதான் இடம் பெற வேண்டும். அது 'தமிழ்க் களஞ்சியந்தானே என்றாலும்—எவை உண்மையில் தமிழ் நெறியோடும், தமிழ்ப் பண்பாட்டோடும் ஒத்த முடிபுகளோ அவைகளுக்குத்தான் அதில் இடமிருக்கவேண்டும்.

அப்படியானால் தமிழிலே இல்லாத எதுவும் இடம் பெறக்கூடாதா? என்று கேட்கத் தோன்றும். தமிழிலே இல்லாதவைகள் கூட, முற்றும் தமிழ்ப்படுத்த முடியாதவைகள்கூட இடம் பெறலாம், அவை கலையானால். கலையல்லாதவை தமிழிலே இருந்தாலும் அவை இடம் பெறத் தேவையில்லை.

எடுத்துக்காட்டாகப் பெரிய புராணத்தை எழுதிய சேக்கிழாரைப்பற்றியோ, அவருடைய கவிதைச் சிறப்பைக் குறித்தோ, தரப்படும் விளக்கம் கலையைப்பற்றியதுதான். சேக்கிழாரால் பாடப்பட்ட ஒவ்வொரு பாடலும் கூட கலைதான். ஆனால்

அந்தப் பாடல்களில் காணப்படும் செய்திகள் கலையாகாது. இயற்பகை நாயனார் சரித்திரமோ—சிறுத் தொண்டநாயனார் கதையோ கலையாகாது. அவைகளைப்பற்றிய குறிப்பும் களஞ்சியத்தில் இடம்பெறுவது களஞ்சியத்திற்கே இழுக்காகும்.

அதைப் போன்றே, கம்பரது கவிதைச் சிறப்பும், அவரது உண்மை வாழ்க்கைக் குறிப்பும் கலைத் தொடர்புடையனவே யன்றிச் சீதையின் கற்பின் மாண்போ, மாருதியின் இராம பக்தியோ, கலைத் தொடர்புடையன அல்ல. சைவ சித்தாந்தத்தின் தத்துவ விளக்கமோ, கைவல்ய நவநீதத்தின் கருத்து விளக்கமோ களஞ்சியத்தில் இடம் பெறுவதைக் குறைகூறவில்லை. காளைமீது ஏறிய கைலாசநாதனையும், மகாவிஷ்ணுவின் மோஹினி அவதாரத்தையும், மயில் மீது திரியும் முருகனையும், ஒற்றைத் துதிக்கையனையும், மூன்று தலையனையும் பற்றித் தீட்டுவது கலையாகாது.

இனி மற்றை நாட்டுக் களஞ்சியங்களிலே—இவற்றைப் போன்ற கடவுளர்களின் படங்கள் போடப்பட்டுள்ளனவே யென்றால், அவை அங்கே இருந்த பழங்கால நிலையை விளக்கும் கருவிகளாக மட்டுமே கொள்ளப்படுகின்றன. அந்தப் படங்களும், அதற்குத் தரப்பட்டுள்ள விளக்கங்களும், அதைப் படிக்கும் எவரும், இப்படியெல்லாம் ஒரு காலத்தில் கற்பிக்கப்பட்டு வணங்கப்பட்டன என்று எண்ணமட்டுமே காரணமாவதால் அவைகள் அறிவு வளர்ச்சிக்குத் தடையாகவில்லை.

இங்குள்ள எல்லாவற்றையும் பற்றிய குறிப்பும் இடம்பெற வேண்டுமெல்லவோ எனில், புராணப் போக்கைத் தழுவியதாக இல்லாவிடில் இடம் பெறலாம். பிரெஞ்சு நாட்டிலே தோற்றுவிக்கப்பட்ட கலைக் களஞ்சியந்தான்—அந்த நாட்டில் தோன்றிய புரட்சிக்கே ஒரு காரணமாக அமைந்தது என்பதை மறந்துவிடக்கூடாது. அந்த அளவிற்கு முற்போக்கான கருத்துக்களும், புரட்சிகரமான எண்ணங்களும் அதில் இடம் பெற்றன.

தமிழ்க் களஞ்சியமும்—ஒரு நூற்றாண்டுக்குப் பின்பும் அதைப் போன்று அமையாவிட்டாலும், இன்றுள்ள மூடக் கொள்கைகள் இடம் பெறாமலாவது அமையவேண்டும்.

'சிவபெருமான்' படம் போட்டுக் காட்டினாலும், அதன் கீழே—'இவ்வாறு மக்கள் கற்பித்துக்கொண்டுள்ளனர்' என்று குறிக்கவேண்டுமே தவிர்த்துச் சிவபெருமான் செய்த திருவிளையாடல்களை யெல்லாம் குறிப்பது தவறாகும்.

இனி மதங்களின் தத்துவங்களை விளக்குமிடத்தும், தத்துவங்களால் குறிப்பிடப்படாத கடவுளரின் கற்பனை உருவங்களை அங்கே சேர்ப்பது தவறாகும். அதற்குப் பதிலாகச் சிற்பக் கலை, ஓவியக்கலை ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது வேண்டுமானால், இந்த நூற்றாண்டில், இன்ன இடத்தில், இந்த உருவம் தீட்டப்பட்டது, இந்தச் சிற்பம் செதுக்கப்பட்டது என்ற குறிப்போடு கடவுளர் உருவங்களைப் படம்போடுவது தவறாகாது.

களஞ்சியம் இந்த முறையன்றி வேறு முறையில் அமையப் பெற்றால் அது அபத்தக் களஞ்சியமாக அமைந்துவிடும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை. அமைச்சர் அவிநாசிலிங்கனார் தலைவராக உள்ள தமிழ் வளர்ச்சிக்கழகத்தின்சார்பிலேதான் இப்பணி

தொடங்கப்பட்டுள்ளது. இந்தக் கழகத்தின் தலைவரோ—சிறையிலே இருந்தபோது கிடைத்த ஓய்விலே திருக்குறள் படித்து, வாய்ப்பு கிடைத்தபோது கம்ப ராமாயண ரசத்தைப் பருகி, குறளிலே காமத்துப்பாலை நீக்கி காமலீலைகளையே மறைவு செறிவின்றி வர்ணனைசெய்யும் கம்பராமாயணத்தை இளைஞர்கள் படித்து முன்னேற வேண்டுமென மனமார ஆசைப்படுபவர்.

அதன் துணைத்தலைவராகிய கலா ரசிகர் டி. கே. சி. யோ, வறட்டு வக்கீல் தொழிலைவிட்டுக் கலையிலே நுழைந்து, கம்பர் ஏட்டைப் புரட்டி, அதில் பல பாட்டை வெட்டி, பாட்டிலே பாவத்தைக் காட்டி, 'ரசனை' வளர்த்து வருபவராவார். அக்கழகத்தின் மற்றைய உறுப்பினர்களோ தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களல்லர். இந்நிலையிலுள்ள கழகத்தார் கையில் தமிழ்க் களஞ்சியம் உருவாகிறது என்றால், அதன் நிர்வாகிகள் உரிமை உறவு கொண்டாடாமலா இருப்பார்கள் என்று எண்ணத்தான் தோன்றுகிறது.

அதுமட்டுமென்றிக் 'களஞ்சியம்' எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்து அவர்கள் கொண்டுள்ள திட்டம் நம்பிக்கை யூட்டுவதாக இல்லை. களஞ்சியம், பெயரினாலும், எழுத்தினாலுந்தான் தமிழ்க் களஞ்சியமாக இருக்குமென்று தோன்றுகிறது. பண்பினால் எவ்வாறு அமையுமோ என்ற ஐயம் அதை அமைக்கும் முறையை வரையறை செய்ய அமைந்துள்ள குழுக்களை நோக்கினால் உண்டாகின்றது. களஞ்சியத்தில் கொடுக்கப்படவேண்டிய கருத்துக்களைப் பத்துப் பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும், தொடர்புடைய இரண்டு மூன்று இயல்களின் (கலைகளின்) கருத்துக்களை முன்னூறு பக்கத்திலிருந்து, ஆயிரம் பக்கத்திற்குள், ஒரு குறிப்பிட்ட அளவில் அடங்கும்படி முறைப்படுத்திய பல தலைப்புக்களாக அமைத்துக் கொண்டு, யார் யாரிடம் எதைப் பற்றி எழுதிப்பெறவேண்டும் என்பதைத் தெரிவிக்க ஒவ்வொரு பகுதிக்கும் மும்மூன்று உறுப்பினர்களைக் கொண்ட, இரண்டிரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைந்துள்ள பத்துப் பகுதிகளில் ஒரு பகுதியிலேயே, நுண்கலைகள், (Fine-Arts) இலக்கியம் (Literature) மொழி இலக்கணம் (Philology) கல்விமுறை (Education) ஆகிய நான்கு இயல்களும் அமைந்துள்ளன. இவை களஞ்சியத்தின் அளவில் எட்டில் ஒரு பகுதியேயாகும். சுமார் ஆயிரம் பக்கங்கள் தான், இவைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் வருகின்ற இலக்கியம் என்ற தலைப்பின் கீழ் தான், தொல்காப்பியத்திலிருந்து—'தூரன்' எழுதிய ஏடு வரையில் இடம் பெற்றாகவேண்டும். தமிழிலே உள்ள ஏடுகளுள்ளே பெரும்பகுதியும் இலக்கியங்கள் தான். எனவே, தமிழரைப்பற்றிய எக்கருத்தை அறியவும் இவ்விலக்கியங்களே துணை. 'இலக்கியம்' என்ற பொதுத்தலைப்பில்—உலக இலக்கியங்களைப்பற்றியும் இலக்கியப் பிரிவுகளைக் குறித்தும், வகைகளைக் குறித்தும் வரைந்ததற்குப் பின், தமிழ் இலக்கியங்கள் யாவும் எந்த அளவிற்கு இடம் பெறும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அப்படியானால், பழமையான அவ்விலக்கியங்களுக்கேன், இவர்

இடந்தேடுகிறார் என்ற எண்ணம் எழக்கூடும். சங்க இலக்கியங்கள் பலவும், அவற்றின் பாடல்கள் பெரும்பகுதியும் — காலத்தால் பழமை உடையன ஆயினும் கலைச் சிறப்பால் புதுமைக் கருத்துக்களைக் கொண்டனவாகலின் ஒரு மொழியின் கலைக் களஞ்சியத்தில் இடம் பெறும் தகுதியுடையனவாம். மற்றும்; இலக்கியமாக—இடம் பெறுவதைத் தவிர்த்து, களஞ்சியத்தில் தமிழ்க் கருத்துக்கள் நிரம்ப வேறு வழியையும் காணோம். நுண் கலைகளானாலும், கல்வியானாலும்; மொழி இலக்கணமானாலும், இவற்றைக் குறித்த செய்திகளில், தமிழில் உள்ளவற்றைக் குறித்த குறிப்புக்கள் தான் கிடைக்க முடியுமே தவிர்த்து, தமிழிலே அவைகளைக் குறித்து வழங்கி வரும் எல்லாக் கருத்துக்களும் இடம் பெறும் என்று கருதுவதற்கில்லை. ஏனெனில்—நூல் வடிவிலே வெளிவராத எதையும் களஞ்சியத்தில் இடம்பெறச்செய்யும் முயற்சி அவர்களிடம் இல்லையென்றே தோன்றுகிறது.

இனி - இக்களஞ்சியத்திற்கான முயற்சிகளின் தொடக்கக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய, திரு. ஆர்.கே. சண்முகம் அவர்கள், 'களஞ்சியம் தமிழ் மொழியிலே அமைவது மட்டுமல்ல—தமிழ்ப் பண்பாட்டோடும் அமைக்கப்படவேண்டும்" என்று குறிப்பிட்டது இன்னும் நினைவிலிருக்கிறது. அவர் குறிப்பிட்டது நிறைவேறவேண்டுமானால், களஞ்சியத்தின் உட்பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் அவ்வக்கலைகளில் வல்ல ஆங்கில அறிஞர்கள் நியமிக்கப்படுவதுபோல அந்தக்கலைகளைத் தமிழ் முறைப்படிக் கற்றவர்களும்நியமிக்கப் படவேண்டும். பெரும் பகுதி— பிற அறிஞர்களின் கருத்துக்களைக் கொண்டு நிரப்பப்படுவது நியாயமே என்றாலும், தொன்று தொட்டுத் தமிழர்கள் கொண்டிருந்த கருத்துக்களும் கையாண்ட முறைகளும் இடம் பெறவேண்டும்.

எடுத்துக் காட்டாக—நுண்கலைகளில் இசையென்று எடுத்துக் கொண்டால், இன்றுள்ள சுரவரிசை இடம் பெற்றால்போதாது. பண்டிருந்த தமிழ்ப்பண்களின் பெயரும், அமைப்பும் இடம் பெறவேண்டும். வீணையோடு யாழும், அவை குறித்த ஆராய்ச்சிக் குறிப்பும் தரப் படவேண்டும். அதைப் போன்றே மருத்துவம் என்றால், ஆங்கில நாட்டு மருத்துவ முறை விளக்கம் மட்டும் போதாது. தமிழ் நாட்டுச் சித்த மருத்துவ விளக்கமும் இன்றியமையாதது. சட்டம் என்றால் மேல் நாட்டுச் சட்டங்களைக் குறித்தும்; இங்கு வழங்கும் மநுநீதி குறித்தும் (Hindu Law) வரைந்து விட்டால் போதாது. தமிழ் நாட்டவரின் பண்பாட்டிற்கொத்த—தேசவளமைச்சட்டம் பற்றியும்—நிலைத்த புகழ் ஒளி வீசும் குறள் நீதி குறித்தும் விளக்கம் தரவேண்டும். இவைகளைக் குறித்துச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுவது என்றால்—அறிவுத் திறன் மட்டும் போதாது—நேர்மைத் திறனும் வேண்டும்.

இந்நிலையில்-இந்தப்பகுதிகளை எவ்வாறு நிரப்புவது என்பதைத் தீர்மானிக்க அமைந்துள்ள குழுக்களை நோக்கினாலோ அவைகளில், பெரும்பாலோர் திருமூர்த்தி இனத்தைச் சேர்ந்தவர்களாகவே அமைந்திருப்பதும்,பலகுழுக்களில்தமிழறிஞர்களோ தமிழ்ப்பற்றுளரோ, பண்பாளரோ கூட இல்லாமலிருப்பதும் நம்மை வருந்தச் செய்கிறது.

இந்நிலையில் "களஞ்சியத்தில்" தமிழ்ப் பண்பாட்டைக் காண்பது

எப்படி என்ற ஏக்கம் நம்மை அழுத்துகின்றது.

அவர்கள் "களஞ்சியம்"-தமிழ் மொழியின் ஒரு பெருங்குறையை நீக்குவதாக அமையவேண்டும் என்று விரும்பினால்-அக்களஞ்சியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் வரும் இயல்கள் ஒவ்வொன்றினைக் குறித்தும்-தமிழிலே உள்ள கருத்துக்களைத் திரட்டித் தருவதற்கு ஒரு பெருங்குழு அமைக்கவேண்டும். அக்குழுவில் தமிழறிஞர்கள் பலரும் இடம் பெறச் செய்யவேண்டும்.

இல்லாவிடில், ஒவ்வொரு கிளைக் குழுவிலும், தமிழ்ப் பேரறிஞர் ஒருவரோ—அல்லது அந்த இயல் தொடர்புடைய தமிழ்க்கருத்துக்களை அறிந்த ஒரு உண்மைத் தமிழரோ இடம்பெறச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யக்கருதினால் அப்படிப்பட்ட பேரறிஞர்கள் இல்லையென்று கூறிவிட முடியாது. பலப்பலர் உளர் அதற்குத் தகுதியானவர்கள். தாவர நூல், உயிர்நூல் பகுதியில், கோவை கல்லூரித் தலைவர் இராமநாதம் பிள்ளை அவர்களும், கணக்குப் பகுதியில் சேலம் கல்லூரித்தலைவர் A. இராமசாமி கவுண்டர் அவர்களும், கல்கத்தா பல்கலைக் கழகத்திலுள்ள S. S. பிள்ளை அவர்களும், மருத்துவப் பகுதியில்-சித்தமருத்துவ வல்லுனர்களான வைத்திய வள்ளல் ஈ. வே. கிருட்டிணசாமி அவர்களும், சுவாமி வலையானந்தம் அவர்களும், டாக்டர் வெங்கடாசலம் பிள்ளை அவர்களும் (ஒரிசா), டாக்டர் A. குருசாமி முதலியார் அவர்களும், வானநூற் பகுதியில், இ. மு. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும், பௌதீக, இரசாயனப் பகுதிகளில், டாக்டர், அருள் நந்தி அவர்களும் (இலங்கை), T.P. நவநீத கிருட்டிணன் அவர்களும் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) கட்டிடக்கலைப் பகுதியில் (Engineering) மதனப் பள்ளி கல்லூரியிலுள்ள நாறும்பூநாதப் பிள்ளை அவர்களும், நுண்கலைப்பகுதியில் நாடகாசிரியர் ப. சம்பந்த முதலியார் அவர்களும், இசைத் துறையில், T. இலக்குமணப்பிள்ளை, திருப்பாம்புரம், சாமிநாத பிள்ளை, கிவளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகியோரும், கல்விப்பகுதியில், அப்பர் சுந்தர முதலியார் அவர்களும், தெ.து. சுந்தரவடிவேல் அவர்களும், சமயப்பகுதியில்—மறைமலை அடிகள், சாத்தூர் கந்தசாமி முதலியார் ஆகியோரும், தத்துவப்பகுதியில், அலகாபாத் பல்கலைக் கழகத்தில் உள்ள திரு. P.S. நாயுடு அவர்களும், வரலாற்றுத் துறையில்—டாக்டர், எம். ஆரோக்கியசாமி அவர்களும், பொருளாதாரத் துறையில் A. முத்தையா அவர்களும், அரசியல் துறையில் C. N. அண்ணாதுரை, T. செங்கல்வராயன் ஆகியோரும், சமுதாய ஒழுக்கப்பகுதியில்-பெரியார் ஈ. வே. இராமசாமி, திரு.வி. கல்யாண சுந்தரனார், மு. வரதராசனார் ஆகியோரும், சட்டப்பகுதியில், S. முத்தையா முதலியார், S. S. பாரதியார், S அரங்கராமானுஜம், ஆகியோரும் இடம் பெறுதற்குரியவர்களிற் சிலரேயாவர். இவர்களுடைய ஒத்துழைப்பையும், கருத்தையும் ஏற்று—களஞ்சியம் வெளிவருமானால், அது களஞ்சியத்தின் மதிப்பையும் பயனையும் உயர்த்துவதாகும்.

அவ்வாறின்றி, ஆங்கிலத்திலே உள்ளதொரு களஞ்சியத்தை அப்படியே தமிழிலே மொழி பெயர்த்ததுபோன்று, களஞ்சியம் அமைவதானால் அதற்கு ஏன் இவ்வளவு

பெரிய முயற்சி என்று கேட்கத் தோன்றுகிறது. அதைவிட ஆங்கிலக்களஞ்சியம் ஒன்றிலே, அதில் வேண்டாதவற்றை நீக்கி விட்டு, தமிழ் மக்கள் கண்ணைத் துடைக்கக் கொஞ்சம் தமிழ்க் கருத்துக்களையும் சேர்த்துக்கொண்டு புதுக்களஞ்சியம் தோற்றி விடலாம்.

இனி, தமிழ்க்களஞ்சியத்தில் தமிழ்நாட்டைப்பற்றிய எல்லா விவரங்களும் இடம் பெறவேண்டுவது நியாயம். அப்படியானால்—ஒவ்வொரு தலைப்பிலும் அதைக்குறித்த தமிழ்க் கருத்துக்கள் இடம் பெற வழி செய்தாகவேண்டும். இது இயலாவிடில்—தமிழ்க் களஞ்சியத்தில் தமிழுக்கு ஒரு குறிப்பிடத்தக்க அளவு (ஒரு—வால்யூம் அளவாவது) இடம் ஒதுக்கப்பட்டு, அதனுள் இந்த ஒவ்வொரு தலைப்பிலும் வரவேண்டிய தமிழ்க் கருத்துக்கள் சுருக்கமாகவேனும் இடம் பெறச் செய்யவேண்டும்.

மற்றும், களஞ்சியத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்டனவாக வரும் கருத்துக்கள்—இரண்டு தனிப்பட்டவர்களின், குழுவினர்களின் (மதத்தினரின்) கருத்துக்களாக இருக்கலாமே தவிர்த்து—அதன் பொதுப்படையான கருத்துக்களில் வரக்கூடாது. அதாவது—அறிவியலுக்கு முரண்பட்ட கருத்து—ஒரு மதத்தின் கருத்தாக, ஒரு தனிப்பட்டவரின் கொள்கையாகக் குறிப்பிடலாமே தவிர்த்து—பொதுக்கொள்கையாக அமைத்துவிடக் கூடாது. உலகம் உருண்டை என்ற கருத்தை உலகம் தட்டை என்று எண்ண வைக்கும் கதையோ, கடவுள் உருவமற்றவர் என்ற கருத்தை, கடவுளுக்குக் கை நான்கு என்ற குறிப்போ மறுக்கக் கூடிய தன்மையில், களஞ்சியத்தில் இடம் பெறக்கூடாது. அவைகள்—வருமிடமெங்கும் அவ்வாறு இன்னார் கருதினார்கள் என்றவிளக்கம் இருக்க வேண்டும். முதன் முதலாகக் களஞ்சியம் காணமுயன்ற பிரஞ்சு நாட்டுப் பேரறிஞர் டிடெராட் அவர்கள் உற்ற துன்பத்தைப் பட்ட பாட்டைக் கருதியேனும், இவ்வளவு காலந்தாழ்த்துக் களஞ்சியம் காணப்புகும் நாம் நமது கடமையைச் செய்ய வேண்டும். களஞ்சியம், அறிவு விளக்கம் பெறும் கருவியாக வேண்டும்.

களஞ்சியத்தில் கையாளப்படும் கலைச் சொற்கள் யாவற்றையும் தமிழிலே அமைப்பது கடினம் என்பதோடு அவ்வாறு அமைப்பதானாலும், காரணப்பெயர்களாக அமைந்த அறிவியல் சொற்கள் பலவற்றின் உண்மை உருவம் சிதைந்து விடும் என்பதையும், உலகத் தொடர்புடைய அச்சொற்களை நீக்கித் தமிழ்ச்சொற்களைக் கையாளுவது நமக்குத்தான் தொல்லையாக முடியும் என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். எனவே—தமிழிலே ஏற்கனவே பொருத்தமாக அமையாத கலைச்சொற்களையெல்லாம் ஆங்கிலத்தில் உள்ளவாறே களஞ்சியத்திலே எடுத்தாளுவது முறையேயாகும். அவையாவும் ஆங்கிலச்சொற்களல்ல. பலநாட்டு, பல மொழித்தோற்றமுடையன. உலகப் பொதுமையுடையன. அதை உணராது, அவைகளுக்கு ஈடாகத் தாய்மொழிச் சொற்கள் இல்லையா? வேற்றுமொழிச் சொற்களா? என்ற கேள்விகளை எழுப்பி, தாய்மொழிப் பெயரால் வடசொற்கள் புகாமல் காக்க வேண்டும்.

இவற்றைத் தவிர்த்து—மொழிபெயர்ப்புக்காக அமைக்கப்படும் குழுவும்—தமிழ்ப் பேரறிஞர் ஒருவரது தலைமையின் கீழ்த்தனது பணியைச் செய்யவேண்டும். களஞ்சியத்தில்

ஆளப்படும், சொற்களைப் பொறுத்து அவருடைய தீர்ப்பே முடிவாக இருக்கவேண்டும். ஆக்சிஜன்— என்பதைப் 'பிராணவாயு' என்று எழுதி அதுதான் தமிழ் என்று கூறாமல் இருக்க அதுவே வழி. 'உயிர்க் காற்று' என்று வழங்க முடியாவிட்டால் ஆக்சிஜன் என்றும், நீர்க்காற்று என்று கூற முடியாவிட்டால் ஹைட்ரஜன் என்றுமே வழங்குவது நல்லது. உலகத் தொடர்பும் அறிவும் வளர குரோமியம், ரேடியம், பென்சிலின், பெட்ரோல் போன்ற சொற்கள் அப்படியே கொள்ளப்படவேண்டும். ஆனால், 'மின்விளக்கு', 'எலக்ட்ரிக் லாம்ப்' ஆகாமை வேண்டும். எனவே தான், ஒரு தமிழ்ப் பேரறிஞர் களஞ்சியத்தின் சொல்லாட்சியைக் கவனித்துக் கொள்ள முழு உரிமையோடு நியமிக்கப்பட வேண்டுமென விரும்புகிறோம்.

இக்களஞ்சியப் பணி விரைவில் முடிய வேண்டும் என்ற விருப்பத்தால் அவசரப்படுவது தவறு. இது நீண்டநாள் குறையைத்தீர்த்து வைக்கும் முதல் முயற்சி என்ற எண்ணத்தோடு—ஆழ்ந்து சிந்தித்து, சிறந்த முறையில் வெளிவரத் திட்டமிட வேண்டும். ஒரு களஞ்சியம் உருவாக ஆகும் ஆண்டுகளோ, செலவாகும் பொருளோ முக்கியமல்ல. ஆனால் அது எவ்வளவு காலம் பயனளிக்கும் என்பதே முக்கியமாகும்.

களஞ்சியம் நீண்டகாலம் பயனளிக்க வேண்டுமானால் ஆராய்ச்சிக் கருத்துக்கள் தோன்றத் தோன்ற, அவைகளையும் அவ்வப்போது களஞ்சியத்தில் சேர்த்து வரவேண்டும். எனவே—அதற்கென ஒரு தமிழ்ப் பேரறிஞரைத் தலைவராகக்கொண்ட ஒரு நிரந்தரமான மொழிபெயர்ப்புக் குழு, ஒவ்வொரு துறையிலும் பயின்று பட்டம் பெற்ற இளைஞர்களைக் கொண்டதாக ஏற்படுத்தப்படல் வேண்டும். இக்குழு நிரந்தரமாகப் பணியாற்ற அரசியலார் இந்த அமைப்பின் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவைகளுக்குச் செலவு செய்யப் பொருளில்லையென்றால், ஏதேனும் ஒரு பெரிய கோவிலின் வருமானத்தில் ஒரு பகுதியை—ஆண்டுதோறும்—இந்தத்தமிழ்ப் பணிக்குச் செலவிடச்செய்தால் போதும். அதற்குத் துணிவில்லையானால், எத்தனையோ செலவுகளில் இதையும் ஒன்றாக ஏற்றுக்கொண்டு, வழக்கம்போல் வழி கண்டு பிடிக்கட்டும்.

இக்களஞ்சியத்தைத் தோற்றுவிக்கப் பல நூறாயிரம் ரூபாய்கள்தேவை. இது காறும் சேர்ந்துள்ள தொகை நூறாயிரம் தான் என்றாலும் மேலும் சேர்க்கமுடியும் என்பதில் ஐயமில்லை.

பொதுமக்களிடம் பொருள் சேர்த்துப் பொதுப் பணியாற்றுவோர், பொதுமக்களின் விருப்பத்தை மறந்துவிடக் கூடாது. அந்தப் பொதுப்பணியின் விளைவு பொதுமக்கட்கே உரிமையுடையதாக வேண்டும். அப்படியானால் 'களஞ்சியம்' முற்றுவிக்கப்பட்ட பின்பாவது அரசாங்க 'உடைமையாக ஆக்கப்படவேண்டும். இதனைத் தோற்றி வைக்க முன் வந்த அமைச்சர், அவரது இயல்பான தன்மையால்— எப்படியோ போகட்டும் என்று எண்ணிவிடாமல் — பயனளிக்கும் விதத்தில் களஞ்சியத்தை உருவாக்க முற்படவேண்டும் என்பதே நமது விருப்பம்.

உலகினரின் அறிவியல் வளர்ச்சியோடு-இந்நாட்டுமக்களின் வாழ்க்கையையும் இணைக்கும் பணியாகக்களஞ்சியப்பணி திகழ வேண்டும்.

தேட முடியுமே!

[பேராசிரியர், மு. வரதராசனார்.]

காலையில் சிற்றுண்டி முடித்து விட்டுச் சென்னை விமான நிலையத்தில் விமானம் ஏறி, பகல் உணவிற்கு டில்லியில் சென்று சேரலாம். சென்று சேர்ந்தவுடனே டில்லி தபால் நிலையத்திற்குப் போய், "நலமாக வந்தேன். மற்றவை கடிதத்தில்" என்று அவசரத் தந்தி ஒன்று சென்னையில் உள்ள குடும்பத்தார்க்கு அனுப்பிவிடலாம். செல்வமும் செல்வாக்கும் மிகுதியாக இருந்தால், நேரான தொலைபேசி (Trunk Telephone) வாயிலாகச் சிறிது நேரம் தொடர்பு கொண்டு, மனைவிக்கு எல்லாவற்றையும் சொல்லி கவலை கொஞ்சமும் ஏற்படாமல் செய்துவிடலாம். செல்வமும் செல்வாக்கும் இல்லாமல், உழைத்து வயிறு வளர்க்கும் உழைப்பாளியாக இருந்தாலும், மூன்றும் வகுப்பு ரயில் வண்டியில் பல துன்பங்களைப் பட்டபடியே டில்லிக்குப் போய், போய்ச்சேர்ந்தவுடன், ஒன்றரை அணா செலவு செய்து நீண்ட கடிதம் ஒன்று எழுதிக் குடும்பத்தார்க்குத் தெரிவிக்கலாம். இவ்வளவும் இன்று உள்ள தமிழ் மக்கள் பெற்றுள்ள வாய்ப்புக்கள்

இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் இப்படி ஒருவர் வடநாட்டுக்குப் போவதாக வைத்துக்கொண்டு எண்ணிப் பார்த்தால், கற்பனை எவ்வளவோ குறை உடையதாக இருக்கும். விமானம் இல்லை, புகைவண்டி இல்லை, தந்தி இல்லை, தபால் இல்லை; காலால் நடக்கும் பழக்கம், காடும் மலையுமான வழிகள், சில பகுதிகளில் மட்டும் செம்மையான பாதைகள், அங்கங்கே சில மாட்டு வண்டிகள் (தேர்கள்), சில குதிரை வண்டிகள் (தேர்கள்), சிறிது தொலைவு அச்சமற்ற வழிப்பயணம், நெடுந்தொலைவு கொள்ளையும் கொலையும் மலிந்த பயணம்—இவ்வளவும் மனக்கண் முன் வந்து நின்றால்தான் உண்மையான கற்பனையாக முடியும். இவை எல்லாம் நிரம்பிய பிறகும், பழங்காலத்தில் அந்த வடநாட்டு நகரங்கள் எப்படி இருந்தன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அங்கே தமிழர் கூட்டம் தனிப் பகுதிகளில் வாழ்ந்து வந்தார்களா? தமிழ் பேசாவிட்டாலும், வேறு மொழி பேசியாவது அங்கிருந்த வடநாட்டு மக்

களோடு பழக முடிந்ததா? காசு கொடுத்து உணவு விடுதிகளில் தங்குமிடமும் உணவு முதலிய வைகளும் பெற்றுச் சில நாட்கள் வாழ்ந்திருக்க வழி இருந்ததா?

இந்த நிலையில் தமிழன் ஒருவன் அந்தக் காலத்தில் வேங்கட மலை கடந்து, வறண்ட பாலை நிலப் பகுதிகள் பல கடந்து வடநாட்டுக்குச் சென்றால், அவனைப் பிரிந்த குடும்பம் எவ்வளவு கவலைப்பட்டிருக்கும்? அவனுடைய வாழ்க்கைத் துணைவி எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள்? அவன் செல்லும் வழியில் உள்ள மலைகளையும் காடுகளையும் பொல்லாத விலங்குகளையும் வழி பறிக்கும் கொள்ளைக் கூட்டங்களையும், அவர்களின் கொலைக் கருவிகளையும் பற்றிப் பலவாறு எண்ணி எண்ணி நைந்திருப்பாள். அவன் உயிருக்கு ஏற்படக்கூடிய பல தீங்குகளையும் நினைந்து நினைந்து நொடிக்கு நொடி மனமுடைந்திருப்பாள். சில வாரங்கள் இவ்வாறு கழிந்தபிறகு, "நல்ல படியே போய்ச்சேர்ந்திருப்பார், வாணிகம் தொடங்கியிருப்பார். விரைவில் திரும்பிவர முயற்சி செய்துகொண்டிருப்பார்" என்று உயிர்த்தோழியும் மற்றவர்களும் அந்தக் குடும்பத் தலைவிக்குத் தேறுதலாகப் பல பல சொல்லி ஆற்றுவார்கள். இந்த ஆறுதல் மொழிகளை எல்லாம் ஒருவாறு நம்ப முயலும்போதே, தலைவியின் நெஞ்சில் அவருடைய உயிர்வாழ்க்கையைப் பற்றிப் பலவகை ஐயங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் மீண்டும் மீண்டும் எழுந்து எழுந்து அலைத்துக் கொண்டிருக்கும். "அவர் உண்மையாகவே வடநாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பாரா? அதற்குச் சான்று என்ன? அவர் பிரிந்த அன்று காலை கண்டதும் கேட்டதும் தவிர, அப்பால் அவரைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லையே. அவரைக்கண்டதாகவும் எவரும் கூறவில்லையே! அவரைப் பற்றி அறிந்ததாகவும் எவரும் செய்தி சொல்லவில்லையே! அவர் உயிரோடு இருக்கின்றாரோ? எப்படித் தெரிந்து கொள்வது? இத்தக்கவலை மெல்ல மெல்ல என்னையும் கொன்றுவிட்டதே! இனி இப்படியே நைந்து நைந்து உயிர்விடவேண்டியது தானோ" என்று தலைவி வருந்தி வருந்தி மெலிவாள்.

இந்த நிலையில் அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றுவது தோழியின் கடமையாகும். இவ்வாறு தோழி தேற்றும் முயற்சியைச் சங்க காலத்துப் புலவர்கள் பல பாடல்களில் உருவாக்கியுள்ளார்கள்.

அவற்றுள் ஒரு பாட்டு வெள்ளிவீதியார் என்ற பெண்பாற் புலவர் பாடியது. வெள்ளிவீதியார் புலவராக வாழ்ந்தது மட்டுமல்லாமல், காதலியாகவும் வாழ்ந்து உணர்வுலகத்தில் திகழ்ந்தவர். ஆகையால் கற்பனையுலகம் அல்லது கலையுலகத்

திலிருந்து பிறந்த பாட்டா, அல்லது உண்மையான உணர் வுலகத்திலிருந்தே பிறந்த பாட்டா என்று பிற்காலத்தா ருக்கு ஐயமும் எழுந்தது. வெள்ளிவீதியார் பிறருடைய அனுபவத்தைப் பாடியுள்ளாரா, அல்லது தம் அனுபவத்தையே பாடியுள்ளாரா என்பது விளங்க வில்லை. எப்படி இருந்தாலும், ஒன்றுமட்டும் உண்மை ; காதல் வாழ்க்கையில் பண்பட்ட நெஞ் சம் பெற்ற பெண்பாற் புலவர் ஒருவர் பிரிவாற்ருமல் வருந்தும் காதலியின் நெஞ்சம் இத்தகை யது என்று உணர்ந்து தேற்ற முயன்ருல், அது எவ்வளவு பய னுள்ள முயற்சியாக விளங்கும் ! அவ்வளவு சிறந்த உணர்வு இந்தப் பாட்டில் காண்கிருேம்.

"அம்மா! காதலர் பிரிந்து சென்று நெடுங்காலம் ஆனதே என்று வருந்துகின்ருயே! அவர் கடல் வழியாகச் சென்றிருந் தால் வருந்தலாம். கடல்கடந்து செல்ல வேண்டுமாளுல் மரக் கலத்தில்தானே செல்லவேண் டும். காலால் நடந்தல்லவா சென்ருர்? காலால் கடல் கடந்து செல்ல முடியுமோ? நீ ஏன் வருந்துகின்ருய்? நம் கண் காணத்தானே பிரிந்தார்? நிலத் தைத் தோண்டிக்கொண்டு நிலத் தினுள் புகுந்து செல்ல வில்லையே! வானத்தில் ஏறி எங்கோ ஓர் உலகத்திற்குச் சென்று விட்டாரா? அதுவும் இல்லையே! இந்தப் பரந்த நில வுலகத்தில்தானே இருக்கின் ருர்? வடநாட்டிற்குத்தானே பிரிந்துபோயிருக்கின்ருர்? அங் குள்ள நாடுகளும் நம் நாட்டைப் போன்றவைதானே! அங்குள்ள ஊர்களும் நம் ஊரைப் போன்ற வைதானே! அங்குள்ள மக் களும் நம்மைப்போல் குடும்பம் குடும்பமாகத்தானே வாழ்கின் ருர்கள்! ஆகையால் அவர் வட நாட்டிற்குச்சென்றதற்காக இவ் வளவு கவலைப்படலாமா? நிலத் தடியில் செல்லவும் முடியாது. வானத்திற்கு ஏறிச் செல்லவும் முடியாது. காலால் நடந்து கடல் கடந்து போகவும் முடி யாது. வடநாட்டிற்குத்தானே சென்றிருக்கிருர். நம் நாடு, நம் ஊர், நம் குடும்பம் போன்ற நாடு களும் ஊர்களும் குடும்பங் களுமே வடநாட்டில் உள்ளன. ஆகையால் நாடு நாடாக, ஊர் ஊராக, குடும்பம் குடும்பமாகத் தேட முடியும்; தேடிக்காண முடியும்; அவர் காணுமல் போவ தற்குக் காரணமே இல்லையே! நீ வருந்துவது ஏன்? என்று சொல்லித் தேற்றினுள் தோழி.

"நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏருர்
விலங்கிரு முந்நீர் காலின் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோநம் காத லோரே."

(குறுந்தொகை)

மாதரசி கியூரி

★

மு. முழந்தைவேல்.

★

போலந்து நாட்டைக் குறித்துப் பலரும் கேள்விப்பட்டிருப்பர். அந் நாடு 18-19ம் நூற்றாண்டுகளில்-தேசப் படத்திலேயே இடம் பெறாமல் மறைந்திருந்தது. சர்மனி, ரஷ்யா, ஆஸ்ட்ரியா ஆகிய நாடுகள் அதைப் பங்கிட்டுக்கொண்டிருந்தன.

ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆளுவது என்றாலே அடக்கு முறை தானே தாண்டவமாடும்? அதிலும்-ரஷ்ய ஜார் ஆட்சிஎன்றால் கேட்கவா வேண்டும்?

ரஷ்யாவுக்கு அடிமைப்பட்டிருந்த பகுதி முழுவதும், கல்வி நிலையங்கள் யாவும் ஆட்சியாளரின் நேரடியான மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வந்தன. கலைகள் யாவும் ரஷ்ய மொழியிலேயே கற்பிக்கப்பட்டன.

தூக்குத்தண்டனை அளிக்கப்பட்ட ஒருவனை, மேலும் கொடுமைப் படுத்த அவனைக் கொண்டே தூக்குச் சட்டமும் கயிறும் உருவாக்கி, அவைகளைக்கொண்டே அவனைக் கொல்ல நினைப்பதைப் போன்று, ரஷ்ய மொழி தவிர்த்து வேறு எம் மொழியிலும், அவர் தம் தாய்மொழி யானாலுங் கூட, கல்வி பயிற்றக் கூடாதென தடை விதித்ததோடு, போலிஷ் மக்களில் சிலரைக் கொண்டே அந்த இனத்தையே மீளா அடிமைப் படுகுழியில் தள்ளச் சதி நடத்தியது ஜார் கூட்டம்.

போலிஷ் மக்கள்-புரட்சி செய்யாமலில்லை. அவ்வப்பொழுதும் ஆள வந்தார் படைபலங்கொண்டு புரட்சியை அணைத்து வந்தனர். ரஷ்ய ஆட்சிக்குட்பட்ட அவர்கள் நிலையோ, 1872ல் அதைவிட வருந்தத்தக்க நிலை வேறில்லை என்று கூறும்படியாயிற்று.

அந்த ரஷ்யப்பகுதியில் இருந்த ஒரு கல்வி நிலையத்தில், கிளாடிஸ்லாவ் குளோடோஸ்கி (Kladislav-Sklodoski) என்பவர் அறிவியல் துறையில் ஆசிரியராக

இருந்தார். அவரது ஐந்து குழந்தைகளிலே கடைசியான, மன்யா (Manya) என்பவள், இளம் வயதிலேயே அறிவு நுட்பத்திற்கும் நினைவுத்திறனுக்கும், பிறரால் போற்றப்பட்டு வந்தாள். அவளுடைய மூன்று தமக்கைகளும், ஒரு தமையனும் அவளை அன்பாக நடத்தி வந்தனர். அவளுடைய தந்தையோ வருவாய் குறைவாயினும், தன் குடும்பத்தைச் சீராக நடத்திக், குழந்தைகளுக்குக் கல்வி அறிவூட்டித் திருப்தியோடு வாழ்ந்து வந்தனர். எவ்வளவு திறமையோடு நடப்பினும் வாழ்க்கைப் பாதை மிருதுவானதல்லவே ?

திடீரென்று அவரது மூத்த மகள் சொசையா (1876ல்) இறந்தாள். அதிலிருந்தே இன்னல்கள் அடுக்கி வந்தன. அவரது ஊதியம் குறைக்கப்பட்டது. வகித்து வந்த அரசாங்கப் பொறுப்பும் பறிக்கப்பட்டது. எனவே அவர் வசித்து வந்த விடுதியைவிட்டு, வேறிடஞ்சென்று வாழ வேண்டிய கட்டாயத்திற்கா ஆளானார்.

அவரது மனைவியோ, தனது தாயன்பையும் தனது குழந்தைகளிடம் காட்டிக் கொள்ள முடியாமல் தவித்தார். மன்யாவிடமோ அளவற்ற ஆசைதான். அன்போடு கட்டித்தழுவி முத்தமிடத் தோன்றும், குழந்தையின் நலத்தைப்பற்றிய எண்ணமே அவளை முத்தமிடாமல் தடுக்கும். அவள் 'காச நோய்க்கு' ஆளாகி இருந்ததால்-அத்தொத்து நோயால் குழந்தையும் பாதிக்கப் படக்கூடும் என்பதற்காகவே இக் கட்டுப்பாடு.

அந்தக்கொடிய நோயே அவளை அவளது கணவனிடமிருந்தும் குழந்தைகளிடமிருந்தும் 1878ல் பிரித்து விட்டது.

இப்பொழுதோ குளோடோஸ்கி தனியே நான்கு குழந்தைகளை வளர்க்க வேண்டியதாயிற்று. அவனது குழந்தைகளிலே பெரியவளான (Bronya) பிரன்யா தன் தாய்க்குப் பதில்- குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவளானாள். அவள் நல்ல படிப்பாளியாதலால் குடும்பத்தைத் திறம்பட நடத்தி வந்தாள். எனினும் அவளது உள்ளத்திலே பாரிசுக்குச் சென்று மருத்துவம் பயின்று வந்து தன் நாட்டிற்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற ஆசை நிலைத்திருந்தது. அவளது தந்தையின் நிலையைக்கருதி, எண்ணம் ஈடேறத் தானே வழி வகுத்துக் கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் மிக்க அமைதியான இயல்பும், ஆழ்ந்த அறிவும், கோபம் கொள்ளக் கூசும் மனமும் கொண்ட, மன்யாவினுடைய பள்ளிப்படிப்பு ஒரு முடிவுக்கு வந்தது முதன்மையாகத் தேர்ந்தமைக்கு, அவளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தூக்க முடியாத அளவிற்கு ரஷ்யப் புத்தகங்களே அப்பரிசுகள். அவளதுதந்தைக்கோ அது பெருமையாகவிருந்தது. ஆனால் அவளுக்கோ அது பொறுமையையும் இழக்கச் செய்தது. அதிகாரிகள் காதுக்குக் கேட்கும்படி இது சகிக்க முடியாத அநீதி' என்று கூறியவளாக நடந்தாள். அவளது தாய்மொழிப்பற்றின் ஆழத்தை அது தெளிவாக்குகிறது.

மன்யா எந்தப் பாடத்தையும் இருமுறைக்கு மேல் படிக்கமாட்டாள் என்றாலும் எப்பொழுது கேட்டாலும் வரிதவறாமல் ஒப்புவிப்பாள். அத்தகைய தகுதிமிக்க மாணவியின் படிப்பு அங்கே அந்த ஆண்டோடு

முடிவடைந்து விட்டது. அதற்கு மேல் வெளி நாட்டிற்குத்தான் செல்லவேண்டும். பொதுவாகவே அந்நாட்டில் பெண்கள் அதிகமாகப் படிக்க அநுமதிக்கப்படவில்லை. அவளுடைய தந்தையோ, அதிக உழைப்பிற்குப்பின் ஓய்வுகொள்ள, ஓராண்டு நாட்டுப்புறவாசம் செய்யக்கூறினார்.

இந்த ஓராண்டில், அவள் பெரிதும் மாறிவிட்டாள். சோம்பல் குடிகொண்டது. தான் அதுவரைப் படித்திருந்தவை உண்மைதானு என்று ஐயுறும் அளவிற்கு அவைகளை மறந்திருந்ததாக அவள் தன் தோழிக்கு எழுதியிருந்தாள்.

கவலையற்றிருந்த ஆண்டு கழிந்தது. மீண்டும் 'வார்சா' திரும்பியதும் முன்பிருந்த ஆர்வத்தைப் பெற்றாள்.

ஒரு அடிமை நாட்டில் எவ்வளவு தான் அடக்குமுறைகளைக் கையாண்டாலும், அறப்போர்களை வீழ்த்தினாலும் 'விடுதலை வேட்கை' அழிந்து விடாது. புரட்சியினால் கிட்டாத வெற்றியை, இரகசிய இயக்கங்கள் மூலம் அடைய வேண்டி, ஆர்வமும் ஆற்றலும் கொண்ட அறிஞர் பலர், விடுதலை வேட்கையை வளர்த்து வந்தனர்.

முக்கிய இடங்களில், இடம் பெயரும் கல்லூரிகளை (Floating Universities) இரகசிய முறையில் நடத்தி வந்தனர். போல் மொழியில் அறிவியல், வரலாற்றுக் கலைப் புத்தகங்களைத் திரட்டி ஆங்காங்கே கொடுத்து, அறிவை வளர்ப்பதே இக்குழுவினரின் திட்டம். இதில் கற்றவர்கள் மற்றவர்களுக்கு ஆசிரியராக வேண்டும்.

இக்குழுவில் உறுப்பினராகச் சேர்ந்தாள் மரியா. அவளது செல்லப் பெயரே மன்யா. அவளுடைய தந்தை விஞ்ஞானக் கருவிகளைக் கையாளுவதைக் கண்ணுற்ற அவளது இளமைப் பொழுதில் எழுந்த ஆவல் நிறைவேற வாய்ப்பு கிடைத்தது. நாட்டில் கண்காணிப்பு அதிகமிருந்ததால்,எச்செயலும் மிகுந்த முன்னேற்பாட்டுடன் நடக்க வேண்டியிருந்தது. ஆள்வோர்களின் கருத்தை இழுக்காத வழியில், விநோதசாலை (Museum) என்ற பெயரால் திரையிட்டு, விஞ்ஞானம் பரப்பப்பட்டது. இங்கே, மரியா மிகுந்த உற்சாகத்தோடு பயின்று வந்தாள்.

அச்சமயத்தில் அவளுடைய தந்தை தனது ஆசிரிய வேலையினின்றும் விலக நேரிட்டது. வந்து கொண்டிருந்த சிறுவருவாயும் நின்று விட்டதால் குடும்பம் நடைபெற ஒவ்வொருவரும் உழைக்கவேண்டியதாயிற்று. அவளுக்கு 17-வயது ஆவதற்குள் குடும்பத் தொல்லைகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்து விட்டது.

நிலைமைக் கேற்றபடி பெருஞ் செல்வர் வீட்டில் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும் வேலையில் அமர்ந்தாள். அவளுடைய சமத்துவ மனப்பான்மைக்கு இது பிடிக்காவிடினும் வேறு வழி இல்லை. இதிலிருந்து சிறு சிறு தொகையாகச் சேர்த்துப் பாரிசில் படித்து வந்த தன் தமக்கைக்கும் அனுப்பி வந்தாள்.

அவள் நகரத்தில் வாழ்வதால் ஏற்படும் அதிகச் செலவைத் தடுக்க, கிராமத்திற்குச் சென்று இதே பணியில் அமர்ந்தாள். இதனால், தமக்கை பிரன்யாவுக்குத் தவறாமல் உதவி செய்ய முடிந்தது.

1888ல் அவளுடைய தந்தை குளோடோஸ்கி தன்நாட்டவரையே அடக்கி ஆளும் பணியில், வருவாய்க்காக அமர வேண்டியதாயிற்று.

பிரன்யா, வைத்தியக்கல்லூரியில் அவளுடன் பயின்ற ஒருவனை மணக்கப் போவதாகவும், அடுத்த ஆண்டில் மன்யாவைப் பாரிசுக்கு வரும்படியும் பிரன்யாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

ஆறு ஆண்டுகள் 'செவிலியாக' உழைத்தபின் மீண்டும் வார்சாவுக்கு வந்து குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றும் பணியில் ஈடுபட்டாள், பாரிசுக்குச் செல்லும் வழிச்செலவிற்குப் பொருள் சேர்க்க.

மேலும் மேற்படிப்பைக் கடத்திக் கொண்டிருக்க இயவில்லை. அப்பொழுதே அவளுக்கு வயது 24.

எனவே, முன்னரே பிரன்யா அறிவித்திருந்தபடி இன்றியமையாத பொருள்களைத் தயார் செய்து கொண்டு, மிகக் குறைந்த செலவில் செல்லக்கூடிய, ஜர்மனி வழியாகச் செல்லும் ரயில் வண்டியில் அவளுக்கு ஒரு இடத்தை ஏற்பாடு (Reserve) செய்து கொண்டபின்னரே மன நிம்மதியடைந்தாள். அவள் பயணம் நடத்தியது முதல் வகுப்பிலோ, இரண்டாம் வகுப்பிலோ அல்ல; ஆனால், மேல் மூடியில்லாத, சாமான்கள் போடப்படும் நான்காம் வகுப்பில்தான். தந்தையிடம் விடை பெற்றுப் பாரிசுக்குப் புறப்பட்டாள்.

நீண்ட, கடினமான பயணத்திற்குப்பின் பாரிசை அடைந்ததும் அவள் மனம் புதுவாழ்வு பெற்றதாகக் கருதிக் களித்தது. அவள் பிறந்ததிலிருந்து இன்றுதான், உரிமை நிலத்தின்மீது நிற்கின்றாள். அவரவர் விருப்பத்திற்கிணங்க உடுத்து, தம் தம் மொழிகளைப் பேசி, வேண்டியபடி உலவிக்கொண்டிருந்த காட்சி, அடிமை நாட்டினின்றும் வந்த மன்யாவுக்கு வியப்பளித்தன.

இவைகளைக் கண்டு கொண்டே செல்லுகையில், 'பிரஞ்சுக் குடி அரசு விஞ்ஞான வகுப்பு முதற்பகுதி (1891) நவம்பர் 3-ம் நாள் தொடங்கும்' என்ற விளம்பரம் அவளுடைய கருத்தை இழுத்தது. அவள் நினைத்துக் கொண்டிருந்த புகழ்பெற்ற 'சோர்போன்' (Sorbonne) கல்லூரியின் விளம்பரப் பலகைதான் அது. அக்கல்லூரியிலே மரியா குளோடோஸ்கா என்று தன் பெயரைப் பதிவித்துக் கொண்டாள். ஆனால், படிப்போ, அவள் எண்ணியிருந்தது போல அவ்வளவு எளிதாக இல்லை. கற்க வேண்டியன பலப் பலவாகவும் பேரளவினதாகவும் உள்ளதைக் கண்டாள் எனினும் உளம் தளரவில்லை.

சிக்கனத்திற்காக, தமக்கையுடன் வாழ்வதை விடுத்து, கல்லூரிக்கு அருகிலேயே தங்கிக் கொண்டாள். அவளுடைய தந்தையிடமிருந்து மாதம் நாற்பது ரூபிள்கள் வந்தன.

அத்தொகையைக் கொண்டே தான் உணவு, உடை, கல்லூரிக் கட்டணம், புத்தகங்கள் முதலியவற்றிற்குச் செலவு செய்து கொள்ளவேண்டும். அவளுக்கோ சமையல் பழக்கமும் குறைவு. எனவே, அந்நாட்டு முறைப்படி மிக எளிய உணவாகிய, ரொட்டியும் வெண்ணெயும் டீயுமே உண்டு வந்தாள். உணவு விடுதிக்குச் சென்று உண்ணவும் பொருள் நிலை இடந்தரவில்லை. அந்நிலையிலும், கலைபயிலுவதிலேயே கருத்திருத்தி வாழ்ந்து வந்தாள். இரவு

இரண்டு மூன்று மணிவரைப் படித்து விட்டு மயங்கி உறக்கம் கொள்வாள்.

இவ்வாறு பயின்று 1894ல், இரண்டு எம். ஏ., பட்டங்கள், போற்றுதற்குரிய வகையில் பெற்ருள்.

வெளிநாடு சென்று படிப்பவர் களுக்கு உதவும் சங்கத்தினின்றும் மரி உதவிபெற்றுப், பலவகை இரும் புகளிலும் உள்ள காந்த சக்தியைக் கண்டறியும் ஆராய்ச்சியில் அச்சங்கத் தின் சார்பில் ஈடுபட்டிருந்தாள். அவ் வமயத்தில், போலந்தினின்றும் வந்த அறிவியல் ஆசிரியர் ஒருவரின் பழக்கத்தால் பியரிகியூரி (Pierre-Curic) என்னும் வாலிப விஞ்ஞானி யின் நட்பு ஏற்பட்டது. பியரி இளம் வயதிலேயே பட்டங்கள் பெற்று, தனது தமையனுக்கு அறி வியல் ஆராய்ச்சியில் உதவி செய்து வந்தான். 1883-ல் அவனுக்குப் பாரிஸ் ரசாயன சாலையில் தலைமைப் பதவி கிடைத்தது. பாடங் கற்பித் துக் கொண்டே ஆராய்ச்சியில் ஈடு பட்டு இன்றைய விஞ்ஞானத்திற்கு இன்றியமையாத பல விதிகளைக் கண்டு பிடித்தான்.

பியரிகியூரியின் நட்பு மரிக்குப் பயனளித்தது. அவனது செல்வாக் கிஞல், அவளுடைய ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகள் கிடைத்தன. அறிஞர்களின் நட்பு காதலாக முகிழ்த்தது. அவ்விருவரும், 1895 ஜூலை 26ல் திருமணம் செய்து கொண்டனர். இல்வாழ்க்கை ஒரு புறமும், ஆராய்ச்சி மற்ரெரு புறமும் சிறப்பாக நடைபெற்று வந்தன. மணமாகி இரண்டாண்டு கட்குப்பின், ஒரு பெண் மகளைப் பெற்றெடுத்தாள். பின்னும் மூன்று மாதங்களில், - ஒரு ஆராய்ச்சியிலே வெற்றி பெற்றபோது தான் இரு

குழந்தைகளைப் பெற்றெடுத்ததாக எண்ணிப் பூரித்தாள்.

1897-ல் திருமதி பியரிகியூரி (மரியா) டாக்டர் பட்டம் பெற விரும்பிஞள். எக்ஸ்ரே ஒளிகண்டு பிடித்ததை யொட்டி மேலும் ஆராய்ச்சிகள் நடத்திவரும்போது, 'யுரேனியம்' என்னும் உலோக உப்பு தாஞக ஒளிரும் தன்மை யது என்பதை ஹென்றி பெக்குரல் என்னும் பிரஞ்சு விஞ்ஞானி வெளி யிட்டதானது, கியூரி தம்பதிகளுக்கு உற்சாக மூட்டியது. ஒளிரும் தன்மை எவ்வாறு உண்டாகிறது என்பதைக் கண்டறியும் முயற்சியில், அன்று முதலே திருமதி கியூரி ஈடு படலாஞள். பெரிய ஆராய்ச்சிச் சாலையாக வாய்க்காவிடினும், சாதா ரண கருவிகளைக்கொண்ட ஆராய்ச் சிச்சாலையிலேயே ஆராயத் தொடங் கிஞள்.

எடுத்துக் கொள்ளும் யுரேனியத் தின் அளவிற்கு ஏற்றுற்போல் 'ஒளி' வெளிப்படுகிறது என்பதை யும், அச்சக்தி ஒரு தனிப்பட்ட பொருளின் தன்மை என்பதையும் கண்டு பிடித்தாள். எனினும் அப் பொருளில் மட்டுந்தான் அச்சக்தி வெளிப்படுகிறதா என ஐயுற்ருள். ஐயம் தானே, அறிவு விளக்கத்திற்கு அடிப்படை. மற்ற உலோகங்களை யும் ஆராய்ந்து, தோரியம் (Thorium) என்னும் உலோகத்தி லும் அச்சக்தி வெளிப்படுவதை அறிந்து, அச்சக்திக்கு ரேடியம் ஆக்டிவிட்டி (Ridium Activity) எனப்பெயரிட்டார். யுரேனியம், தோரியம், இவைகளினின்று மட்டுமே அச்சக்தி வெளிப்படுகிற தென்று அறிந்தாரே தவிர அதன் மூலகாரணத்தைக் கண்டு பிடிக்க வேண்டிய வேலை இன்னும் முடிவுற வில்லை. பல ஆராய்ச்சிகளுக்குப்

பிறகு அச்சக்தி அவ்விரு பொருள் களைத் தவிர்த்துப் பிறிதொன்றின் குணமாகவே இருக்கவேண்டுமென வும், அது இவைகளின் மூலப்பொ ருளுடன் மிகக் குறைந்த அளவில் கலந்திருக்க வேண்டுமெனவும் உறுதிப்படுத்தி 1898 ஏப்ரல் 12-ம் நாள் திருமதி கியூரி ஓர் அறிக்கை வெளியிட்டார். Pitche Blende என்ற உரேனியத்தின் மூலப் பொருளில் அது இருக்கவேண்டு மெனவும் நம்பினர். இதுகாறும் பிறிதோர் துறையில் ஆராய்ச்சி நடத்திய பியரியும் தன் மனைவி யுடன் ஆராயத் தொடங்கினர். அம் மூலப்பொருளில் புதிய பொருள் ஒரு சத விகிதந்தான் இருப்பதாகக் கணக்கிட்டனர்.

1898 ஜூலையில், அச்சக்தி தோன றும் பொருள் ஒன்றல்ல. இரண்டு என்றறிந்து அதில் ஒன்றை உறுதிப் படுத்திக் காட்டும் அளவுக்கு முன் னேறி விட்டனர். திருமதி கியூரி தன் தாய் நாட்டுப் பற்று கொண்டு இப்பொருளுக்குப் பொலனியம் (Polanium) எனப் பெயரிட்டார். அவ்வாண்டு டிசம்பர் மாதத்திலேயே மற்றொரு பொருளையும் உறுதிப் படுத்தி அதற்கு 'ரேடியம்' எனப் பெயர் கொடுத்தனர்.

இப்புதிய பொருள்களைப்பற்றிய உண்மைகள் விஞ்ஞான உலகி லேயே பெரும் புரட்சியை உண்டு பண்ணின. ஒரு புதிய பொருளைக் கண்டு பிடிப்பது என்றாலே, அதன் தன்மை, நிறம் சக்தி, அதன் அணு எடை ஆகிய பல உண்மைகளை வெளியிட்டால் தான், அறிவுலகம் ஏற்கும்.

ரேடியத்தைத் தயார் செய்வதற்கு இன்றியமையாத மூலப்பொருள் விலை உயர்ந்தது. பிறரிடம் வாங்க வோ இயலாது. உதவிகேட்டும் பயனில்லை.

அம்மூலப்பொருள் கண்ணாடி உற் பத்திக்காகப் பயன் பட்டு வந்தது. உற்பத்திக்குப் பின்னுள்ள கழிவுப் பொருளிலும் 'ரேடியம்' இருக்கலாம், எனக் கருதினர். அதாவது கிடைக் குமா என எங்கியிருந்தகாலை ஒரு நாள் ஆஸ்ட்ரிய சர்க்கார் தொழிற் சாலையில் இக்கழிவுப் பொருள் அழிக்கப்படாமல் உள்ளதென்றும், அதை எடுத்துச் செல்லும் செலவை ஒத்துக் கொண்டால் இனமாகப் பெறலாம் என்றும் கியூரிக்கு ஒரு கடிதம் வந்தது. அவ்விதமே அதைப் பெற்று. மிகக் கடினமான ஆராய்ச்சி யைத் தொடங்கினர். நான்கு ஆண்டு கள் உழைத்த பின் 1902ல் கியூரிகள் ஒரு டெசி கிரேம் (Desi Gram) அளவு ரேடியம் தயாரிப்பதில் வெற்றி பெற்றனர். அதன் அணு எடையும் கண்டு பிடிக்கப்பட்டது. 'ரேடியம்' வைத்திய முறைக் கும் மிகவும் பயன் படுமெனக்கண்ட னர். அதுவரையில் மருந்தின்றி இருந்த கேன்ஸர் (Cancer) என் னும் கொடிய நோய்க்கு 'ரேடியம்' மருந்தாயிற்று. அச்சக்தி ரேடியத் திற்கு உள்ளது என்பது அறியப் பட்டதால் அதன் மதிப்பு மிக அதிக மாயிற்று. ஒரு கிராம் (Gram) ரேடியத்தின் மதிப்பு 750 ஆயிரம் தங்கபிராங்குகள்.

1903-ல் ரேடியத்தைப் பற்றிய பல கட்டுரைகளைவெளியிட்டு திருமதி கியூரி டாக்டர் பட்டம் பெற்றார். நாள் தோறும், ரேடியத்தைப் பற்றிய செய் திகளை அறிந்துகொள்ள, பலநாடுகளி லிருந்தும் கடிதங்கள் வந்துகொண்டி ருந்தன. அப்பொழுது பியரிகியூரி "ரேடியத்தின் உற்பத்தியைப்பற்றி அறிய உலகமே விழைகிறது; நாம்

இதை வாணிபமாகக் கருதினால் பல குடிவழிக்கும் தேவையான செல்வத்தைப் பெறலாம்; அல்லது-பலருக்கும் பயன்படட்டுமென, இலவசமாக இந்த இரகசியத்தை வெளியிடலாம்; நீ எதை விரும்புகிறாய்?'' எனத் திருமதி கியூரியைக் கேட்க, அவர், 'பொருள் கேட்பது விஞ்ஞானப்பண்பாட்டிற்குமாறுபட்டது. விஞ்ஞானம் பொதுச் செல்வம். எதிர் பாராத விதமாக ரேடியத்திற்கு வாணிப முக்கியத்துவம் ஏற்பட்டது. மேலும் அது வைத்திய முறைக்கு மிகவும் பயன்படக்கூடியது. ஆதலின் நாம அதை வாணிபம் ஆக்கக்கூடாது;' எனக் கூறினார். எவ்வளவு உயர்ந்த குறிக்கோள்! எப்படிப்பட்ட தூய உள்ளம்!

1903-ல் இலண்டன் சென்று, இந்த அற்புதப்பொருளைக் குறித்துப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார் பியரி. அதே ஆண்டில் கியூரி தம்பதிகட்கு, 'டேவி பரிசு' இங்கிலாந்தில் வழங்கப்பட்டது. டிசம்பர் மாதத்திலேயே, இருவரும் நோபிள் பரிசும் பெற்றனர்.

அவர்களுக்குக் கிடைத்த பொருளைக்கொண்டு வசதியாக வாழ வாய்ப்புக் கிடைத்தபோதும் ஏற்பட்டசெல்வாக்கினால் அவர்களால் ஓய்வு பெற முடியவில்லை. ஆதலின், அமைதி பெற நாட்டுப்புற வாழ்க்கையை நாடினர்.

அங்கேயும் ஒரு செய்தித்தாள் நிருபர் சென்றுவிட்டார். நிருபர்கள் புகாத இடம்தான் எது? அவருக்குப் பதிலளிக்கையில், ஒருகேள்விக்கு அம்மையார், 'விஞ்ஞானத்தில்—பொருள்களிடத்தில் ஊக்கம் காட்ட வேண்டுமே தவிர்த்து; ஆட்கள் மீதல்ல,' எனப் பதிலிறுத்தார்.

1805-ல் ஜார் ஆட்சிக்கு எதிராகத் தோன்றிய-ரஷ்யப் புரட்சியை ஆதரித்த அவரது நாட்டினரின் செய்கை அவருக்கு உற்சாகமளித்தது.

ஆராய்ச்சியின் பயனாகத் தான் கண்டுபிடித்தபொருள், மிக்க நன்மை புயப்பதாயினும், கேடும் பயக்கவல்லது என்பதை எடுத்துரைத்தார். கொடியவர்களிடத்து அது அகப்பட்டால்-கொலை பாதகத்துக்கு உதவும்; போரிலே கொடியஆயுதமாகக்கூடும்; அதன் சக்தியோ-மேலே பட்டால் தோலை அரித்துவிடும் அளவினது, என்பவற்றைக்கூறி மக்கள் அதை-விஞ்ஞானத்தை நல்வழியில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தினர்.

திடீரென்று, அவருக்குப் பெருந்துணையாக இருந்த பியரிகியூரி-1906, எப்ரல் 16-ல் ஒரு விபத்திற்காளாகி மாண்டார். உலகம் ஒரு ஆராய்ச்சியாளனை இழந்தது. கியூரி, தன்னருமைத் துணைவரையே இழந்தார்.

அதற்குப் பின், பிரஞ்சுக் கல்வித்துறை வரலாற்றிலேயே முதன் முதலாக ஒரு உயர்ந்த பதவியை-ஒரு பெண்ணிற்கு-திருமதி கியூரிக்கு வழங்கினர். தனியே விடப்பட்ட அவர், மிகத் தீவிரமாக விஞ்ஞானத் துறையில் உழைத்து வந்தார்

அவரது இரண்டு பெண்களும், இரானியும் (Irane) ஈவும் (Eve) ஏழ்மையறியாது வாழ்ந்தபோதும்-ஆடம்பரமாக வாழக் கியூரி பழக்கவில்லை.

1911-ல் கியூரி மீண்டும் நோபிள் பரிசு பெற்றார். அவரது ஆராய்ச்சி, மேலும் பலரது உதவியோடு நடைபெற்று வரும்போது 1914-ல் உல

கப் பெரும்போர் அவரின் பாதை யைக் குறுக்கிட்டது.

போரில்-எக்ஸ்ரே வைத்திய உதவி செய்து பெருந்தொண்டு புரிந் தார். ஜர்மன் படை பிரஞ்சு நாட்டு எல்லையில் நுழைந்தபோது, அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்தோர் பலர். ஆனால் திருமதி கியூரியோ, பாரிசில் இருந்த தனது ஆராய்ச்சிச் சாலையை விட்டு வெளியேற விரும்பவில்லை.

1920-ல் அமெரிக்காவினின்றும் அழைப்பு வந்தது. அவரிடம் அப் பொழுது ஒரு கிராம் ரேடியம்தான் இருந்தது. மேலும் 'ரேடியம்' தேவைப்பட்டது. அதற்கான 'பொருள்' தருவதாக அமெரிக்கர் அழைத்தனர். எனவே, அங்குச் சென்று பல இடங்களில் ரேடியத் தைப்பற்றிச் சொற்பொழிவாற்றி னார்.

அவரது புகழ் உலகம் முழுதும் பரவிற்று. சீனாவில், சாக்ரடீஸ், புத்தன், நியூட்டன் ஆகியோர் சிலை களுடன், கியூரியின், சிலையும் இடம் பெற்றது.

1919-ல் இருந்து 1934க்குள்-தனது ஆராய்ச்சிகளைக் குறித்து 483 கட்டுரைகள் வெளியிட்டார். அவரது ஆராய்ச்சிச்சாலையில் பலப் பல இளம் விஞ்ஞானிகள் புத்துலகச் சிற்பிகள் பயிற்சி பெற்று வந்தனர். அதை எண்ணி அவர் பூரித்தார். எனினும், தனக்குப் பின்னும், அவ் வாராய்ச்சிச்சாலை ஒழுங்காக-நடை பெற்றுப் பயன் நல்கவேண்டுமென்ற கவலை அவருக்கிருந்தது.

போர்க்காலத்தில்அதிகம்உழைத்த தால் மிகவும் தளர்ச்சியுற்றார். ரேடி யத்தின் ஒளியிலேயே, ஆராய்ச்சி செய்ததால் உடம்பின்தோல்அரிக்கப் பட்டு வெந்தும் போயிற்று. முதுமை வளர வளர, கண் பார்வையும் குறைந்தது. நான்கு முறை கண் வைத்தியம் செய்துகொண்ட பின் னும் ஊக்கத்தோடு உழைத்து வந் தார். 1934-மே மாதத்தில் நோய் வாய்ப்பட்டு, ஆராய்ச்சிச்சாலையை விட்டுச் சென்றவர், அதன்பின் அங் குத் திரும்பவில்லை. ஜூலை 6-ம் நாள் அவரது மறைவு கேட்டு அறி வுலகம் வருத்தமுற்றது. அவரது உடலும் அவருடைய கணவனரு டையதைப்போலவே, எவ்வித ஆடம்பரமுமின்றி அடக்கம் செய்யப் பட்டது.

தியாகி திருமதி கியூரி தன் நாட் டிற்கென்று கருதாமல், உலகத்திற் கென்றே அரும்பாடுபட்டார். பட் டம் பதவிகளுக்காகவோ, பொன்னும் பொருளுக்குமாகவோ அன்றி, வாழ் நாளையே உண்மைத் தியாகம் செய்த வர் திருமதி கியூரி. அவருடைய உழைப்பு விஞ்ஞானத்திலேயே ஒரு பெரும் புதுமையை - மறுமலர்ச்சி யைத் தோற்றுவித்துவிட்டது.

அவரது, 'பாரிஸ்' பயணத்தைப் போலவே, வாழ்க்கைப் பயணமும் கடினமானதாகவே அமைந்தது. அவரது சகிப்புத்தன்மையும், தன் னலமறுப்பும், பொதுப்பணியில் ஆர்வமும், அறிவியல் பற்றும், மக்க ளிடத்தில் அன்புமே உற்ற இடுக் கண்களைத் தாங்கிக்கொள்ளும் வன் மையை அவருக்களித்தன.

அவர் கண்டு பிடித்த ரேடியத் தின் ஒளி கேன்சர் நோயை அழிப் பது போன்றே அவரது புகழ் ஒளி நமது மூட நம்பிக்கையை வீழ்த்தி நமது தாய்மார்களையும் அறிவுலகப் பணியில் ஈடுபடச்செய்யட்டும்.

வாழ்க கியூரி உள்ளம்!

வளர்க விஞ்ஞானம் !!

ஒலிக்கும் சிலம்பு

இரா. குழு உத்தலைவன்.

மாலையொடு குழைந்த மாலை

வேனிற் காலம் தொடங்கி விட்டது. வேனிலஞ் செல்வன் அரசுநடாத்துகின்றான். அவனுடைய கணைகள், மலர்கள் என்றல்லவா சொல்லுகிறார்கள். அவை எங்கும் மலர்ந்து உள்ளத்திற்கு ஓர் உணர்ச்சியை ஊட்டுகின்றன. செங்கழுநீர்ப் பூக்களும், கருங்குவளை மலர்களும் எவ்விடங்களிலும் காட்சி தருகின்றன. கட்டவிழ்ந்த தாமரை மலர்களில் மட்டருந்தும் விழைவோடு வண்டுகள் வட்டமிடுகின்றன. வயல்களில் மணம் பரவும் நீர்ப்பூக்கள் மண்டிக் கிடக்கின்றன. சோலைகள் முழுவதும் பால்வடியும் தளிர்கள் அரும்புகின்றன. குயில்கள் இசை பாடுகின்றன. தாழை மலரின் வெண்மையான மடல்கள் விரிந்து நீண்டதொலைவிலும் மணம் கமழுகின்றன. மலர்ந்து நிற்கும் சண்பக மரங்களின்மேல் தாவிப் படர்ந்துள்ள குருக்கத்திப் பூக்களின்மீது தென்றல் தவழ்ந்து விளையாடிக் கொண்டே வருகின்றது. புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவி மலர் கொய்யும் மங்கையரின் கூந்தலில் உள்ள மலரில் தேனுண்ட வண்டுகள், மயக்கத்தால் சுற்றி சுற்றித் திரிகின்றன. இந்தவண்டுகளுக்கு நீண்ட நாட்களாக ஓர் ஆவல்! கண்ணகியின் கூந்தலில் உள்ள மலரில் எப்படியாவது தேன் உண்டு மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதுதான் அது. ஆனால் மயக்கத்தால் வழியோ, தெரியவில்லை. மாளிகையில் உள்ள பலகணியின் கண்களில் அவை உட்கார்ந்திருக்கின்றன. இந்த நேரத்தில் வருகின்றதாம் தென்றல். வழியில் உட்கார்ந்திருக்கும் வண்டுகளின் மேல்தான் அதற்கு எவ்வளவு அன்பு! அந்த வண்டுகளை அடித்துக் கொண்டு தென்றலும் உள்ளே நுழைகின்றது.

"கோலச் சாளரக் குறுங்கண் நுழைந்து
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்."

[கோலம்: அழகு. சாளரக் குறும்கண்: பலகணியின் சிறுதுளை
புக்க: புகுந்த. மணம்வாய்: மணத்தை உடைய]

நிலவின் ஒளி வீசும் நெடுநிலை மாடத்தின்மேல் இடத்தில், நிலாமுற்றத்தில் மணிகள் இழைத்த ஓர் அழகிய கட்டில் காணப்படுகின்றது. அதன் மேல் மலர்கள் பரப்பப்பட்டிருக்கின்றன. மலர்மாலைகளும் தொங்குகின்றன. ஞாயிறும் திங்களும் போன்று அதில் வீற்றிருக்கும் காதலர்களை நாம் நன்றாகக் காணமுடியவில்லை. ஆயினும் அவர்களின் காதற்பேச்சுகளிற் சில காதுகளில் வீழ்கின்றன. காதலர்கள் கூடுகின்றனர். தோளும், தோளும் மாறுபடுகின்றன. காதலன் தோள்களில் அணிந்துள்ள தாரும் காதலியின் மார்பில் உள்ள மாலையும் இடையில் அகப்பட்டுக் குழைந்து போகின்றனவாம். முதற் கூட்டம் அல்லவா இது!

நோக்கிய கண் இமையாமல் நோக்கி நோக்கி, நுண்மையான புலவியின் பத்தில் நொந்து நொந்து, தேங்கிய செவ்விதழ் அமுதம் உண்டு உண்டு, சேர்த்தியகை நெகிழாமல் சேர்த்திச் சேர்த்தி, செப்புதற்கரிய கலவியின்பம் நுகர்ந்து, சாதலும் வாழ்தலும் அற்ற, தடைக்கற்கள் ஏதும் இலாத, மோதலும் மேவலும் ஒழிந்த, உள்ளம் மொய்த்தலும் நீங்கலும் இல்லாத இன்ப உலகத்தில், தம்மை மறந்து பிணைந்திருந்த காதலர்கள், அன்புமீறி ஒருவரை ஒருவர் பாராட்டிப் புகழ்கின்றனர்.

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!"

[காசு அறு: குற்றம் அற்ற. விரை: மணம். அரும்பெறல்: பெறுவதற்கரிய. மடமகள்: இளம்பெண்.]

காதலியின் குணங்களை எவ்வாறு கணக்கிட்டுக் கூறுகின்றான் காதலன்! அதில் எவ்வளவு ஆழம்! உள்ளத்தின் நரம்பிலிருந்து மீட்டப்பட்ட ஒலியல்லவா இச்சொற்கள்!

அவளுடைய உடலழகை மட்டும் அவன் புகழவில்லை. அவ்வாறு புகழ்ந்தால் அது வெறுங் காமத்தைக் கருதியதாக வல்லவாமுடியும். ஆகவேதான் அவனது புகழ்ச்சி மேல் நிலையிலேயே நிற்கின்றது உணர்ச்சி கெடாமல்.

இவ்விடத்தில் அல்லவா புலவரின் புலமைத்திறத்தைக் காணவேண்டும். எவ்வளவு நாகரிகமான- உயர்ந்தமுறையில் இப்பஞ்சணை விளக்கத்தைத் தருகின்றார் அவர், சிறிதும் சுவைகெடாமல்!

கண்ணாற் கண்டு, காதாற்கேட்டு மூக்கினால் முகர்ந்து, நாவினால் சுவைத்து, உடலால் உற்று அறியும் ஐம்புல உணர்ச்சியின்பமும் ஒரே இடத்தில் பெறவேண்டுமானால் அந்த இடம் காதலியைத் தவிர வேறு யாதாகஇருக்க முடியும் என்ற கேள்வி இதற்கு முன்பே வள்ளுவர் கேட்டது அல்லவா! "கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள." (குறள்).

இதை மறவாமல் மனத்திற்கொண்டு தன் காதலியைப் பாராட்டும் காதலனை நாம் எவ்வாறு புகழ்வது. இப்புகழ்ச்சிக்கும், பச்சையான கொச்சை மொழிகளால் தன் தம்பியின் எதிரிலேயே தன் காதலியைக் 'குரும்பை ஒத்த அரும்பு முலையாய்!' 'குவியிளவனமுலைக் கொம்பே!' என்பனபோன்ற புகழ்ச்சிக்குந்தான் எவ்வளவுவேறுபாடு! இவற்றை நாம் கூறிடவாவேண்டும். "கெஞ்சுகின்றேன் அஞ்சுகமே பஞ்சபாணம் மிஞ்சுவதால், தஞ்சமென வந்தடைந்தேன் வஞ்சனை செய்யாதருள்வாய்" என்பனபோன்ற இக்காலத்துக் கூளங்களின் நடுவில் இச் சொற்கள் மணிகள் போலல்லவா விளங்குகின்றன.!

"மாசு அறு பொன்னே!"

குற்ற மற்ற பொன் கண்ணுக்கு இனிமையைத்தருவது இயற்கையல்லவா! அதைப் போலவே காதலியும் குற்றமற்றுக் காதலன் கண்களுக்கு விருந்தாகின்றாள்.

"வலம்புரி முத்தே!"

முத்துகள் உடம்பில் பட்டால் உண்டாகும் இன்பம்சொல்லவாவேண்டும்! நுகர்ந்தவர்களுக்குத் தானே தெரியும். ஆகா! அது போன்ற உடலின்பத்தைத் தரும்காதலி, குடிப் பிறப்பாலுங்கூடக் குற்ற மற்று விளங்குகின்றாளாம், வலம்புரியினின்றும் பிறந்த முத்தைப் போல.

"காசு அறு விரையே!"

மாசற்ற மணப் பொருள்கள் எவ்வகையான இன்பத்தை உள்ளத்திற்கு ஊட்டுமென்பது யாவரும் அறிந்ததுதான். அதைப் போலத்தான் அவளும்.

"கரும்பே!"

கரும்பின் சுவையை இதற்கு முன்பு எத்தனையோமுறை உண்டு சுவைத்த நாவானது காதலியின் இதழ் அமிழ்தம் உண்டபின்பு இவ்வாறுஉள்ளத்தோடு பாராட்டுவதில் வியப்பு என்ன இருக்கமுடியும்!

"தேனே!"

காதிற்கு இனிமையாகப் பாடும் வண்டுகளின் ஒலி போன்றன அவள் சொற்கள். அச் சொற்கள் ஒவ்வொன்றையும் இன்பத்தேன் துளிகளாகக் கருதுகின்றான் அவன்.

அவன் சொற்களில் தான், எவ்வளவு பொருள் ஆழ்ந்து கிடப்பதைக் காணுகின்றோம். இவைஎல்லாம் கோவலன்கூறியது உண்டோ இல்லையோ. புலவர் கூறுகின்றார், அதிலும் துறவுக்கோலம் பூண்ட புலவர்!

மேலும் காதலன் தொடருகின்றான்;

"மலையிடைப் பிறவா மணியே என்கோ!"

தலைவி மலையில் பிறவாத மணியைப் போன்றவளாம். ஏன்! அவை கடின மான தன்மையுடையன அல்லவா! அன்றியும் தொட்டால் குழைந்து கொடுக்கும் தன்மைதான் மலையிற் பிறந்த மணிகளுக்கு ஏது?

"அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!"

அமிழ்தம் என்றே அவளைக்கூற ஆவல் கொள்ளுகின்றான், அவள் இன்பத்தைத் தரும் காரணத்தால். ஆனால் ஓர் இடர்ப்பாடு உண்டாகிறது. இவளைப்போல அமிழ்தம் எவ்வளவு இனிமையைத் தந்தாலும், அதற்கு இவளைப்போன்ற வடிவம் ஏது? எனவேதான் "கடலிற் பிறவா அமிழ்தே" என அழைக்கின்றான் காதலன்.

"யாழிடைப் பிறவா இசையே என்கோ!"

யாழிலிருந்து பிறக்கும் இசையின்பத்தோடு காதலியின் சொல்லின்பத்தை அவன் ஒத்திட்டுப் பார்க்கிறான். இசையால் இரண்டும் எவ்வளவு ஒத்திருந்தாலும், யாழ் கண்ணிற்கு அழகாக இல்லையே! கட்டழகு வாய்ந்த காதலி, யாழைவிடச் சிறந்தே காணுகிறாள். ஆதலின் 'யாழினின்றும் பிறவாத இசையே" என்றுதான் அவனால் அழைக்க முடிகின்றது.

இதுபோன்ற காதல் மொழிகள் பல கலந்து குழைகின்றன. காதல் வாழ்க்கையில் நாட்கள்பல இவ்வாறே இன்பத்தோடு கழிகின்றன. இணையற்ற இன்ப வெள்ளத்தில் கரை சாணாது மிதக்கும் காதலர்கள், விருந்தினர்களைப் போற்றியும், துறந்தாரையும், வறியரையும், இரந்தாரையும் தம்மால் இயன்றவரையில் ஏற்று, உண்டி முதலிய தந்து இல்லறம் என்னும் நல்லறம் நடத்தி வருங்காலத்தில் ஆண்டுகள் பல கழிந்தன.

நிர்மலா

திரு. கி. நாகம்மாள் எம். ஏ.

மதுரையில் அன்று ஒரே பரபரப்பு. அதிகாலையிலிருந்தே நகரமெங்கும் குதூகலம் நிறைந்த வெற்றி முழக்கம். ஏனெனில் அன்று மாலை தான் சுதந்திர தினம். நகரப் பொது மண்டபத்தில் சிறந்த விழாவாகக் கொண்டாடப்படப்போகிறது!

தெற்கு வீதியில் உன்னதமான அலங்காரங்களுடன் உயர்ந்து விளங்கும் பெரியதொரு மாளிகை எல்லோருடைய கவனத்தையும் கவருவதாகக் காட்சியளித்தது. செல்வமிக்க பிரபுக்களில் ஒருவரான ராவ் பகதூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையின் உறைவிடம் அல்லவா அம்மாளிகை? ஆகவே அழகோடு அது காணப்பட்டதில் அதிசயம் ஒன்றுமில்லை! எங்கு நோக்கினும் இத்தகைய மகிழ்ச்சி குடி கொண்டிருக்கையில், பொருட்செல்வமும், கல்விச் செல்வமும் ஒருங்கெய்தி வாழ்க்கைக்குரிய சகல சுகங்களையும் எளிதில் பெற்றிருப்பதோடு ராவ் பகதூரின் ஒரே மகளாக ஒப்பற்று விளங்கும் நிர்மலாவின் மனத்தில் மட்டும் பலவித எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி மோதிக்கொண்டிருந்தன. தாயற்ற நிர்மலா ராவ்பகதூரின் செல்வமனைத்துக்கும் தலைவியாகவும், வீட்டில் சகல உரிமைகளையுமுடைய அரசியாகவும் வளர்ந்து வந்தாள்.

நிர்மலா பருவம் வந்தப் பெண். அவளது இயற்கை யழகை வர்ணிக்க இயலாது. அவளது அழகென்னும் விளக்கில் விட்டிலைப்போல் வீழ்ந்திருந்தனர் பலர். மலர்களைச் சுற்றித் திரியும் வண்டுகளைப்போல் பல பிரபுக்களின் மைந்தர்கள் அவள் மாளிகையை வட்டமிட்ட வண்ணமிருந்தனர்.

ஆனால் களங்கமற்ற உள்ளம் படைத்த நிர்மலா, அவர்களின் உள்ளத்தையும் உணர்வையும் கடந்து விளங்குபவளானாள். பெண்மையின், உயர்ந்த பண்புகளமைந்த பாவையென விளங்கும் நிர்மலா, உப்பரிகையில் வாழும் உயர்நிலையிலிருந்தாளேயானாலும், தன் நிலைமையும் கடமையும் நன்கு உணர்ந்திருந்தாள். சிறு வயதிலிருந்தே அறிவு நுட்பத்துடன் திகழ்ந்த நிர்மலா அவ்வுன்னத மாளிகையையும், அதிலுள்ள ஆடம்பர மிக்க விலையேறப் பெற்ற பொருட்களையும், ஆடையாபரணங்களையும், அறுசுவை யுண்டிகளையும் பெரிதென மதிக்கவில்லை. இயற்கையறிவு மிகுந்த அவள், தன் அறிவின் ஆற்றலாலும், அடக்கத்தினாலுமே, நாகரிக வாழ்விலும், செல்வச்செருக்கிலும், தருக்கி வாழ்ந்து, மயங்கிப் போயிருந்த தந்தையின் மனத்தையும், கவர்ந்திருந்தாள். அதன் பயனாகவே அவள் விருப்பப்படி உயர்தரக் கல்வி கற்கும் வாய்ப்பு அவளுக்குக் கிடைத்திருந்தது.

இயற்கை யறிவோடு கல்வியறிவும் சேரவே பொன்மலர் நாற்றமும் பெற்றாற்போன்று விளங்கினாள்.

நிர்மலா. தன் பெயருக்கேற்ப களங்கமற்ற பளிங்குபோன்ற தூய மனதையும், பிறப்பிலுயர்வு தாழ்வு காணு மனப்பான்மையும் ஏழைகளுக்காகக் குழைந்து கண்ணீர் சிந்தும் இதயத்தையும் உடையவளாக இருந்தாள்.

எப்போதும் நிர்மலாவின் நன்மையே நாடும் ராவ் பகதூர் அவளது மனப்பண்பை உள்ளவாறு அறிந்தாரில்லை அவர் மனம் எப்போதும் பணத்திலும் பதவியிலுமே நாட்டாங் கொண்டிருந்தது. பருவம் வாய்ந்த நிர்மலாவைப் படிப்பு முடிந்தபின், தனது தூரபந்துவான, நல்ல அந்தஸ்திலுள்ள ஜமீன்தார் இராமசாமி பிள்ளையின் ஒரே மகன் விசுவநாதனுக்கு, நிர்மலாவை மணம்முடித்துக் கண்ணாரக் கண்டு களிக்கவேண்டுமென்பதே அவரது ஆசை.

ஆகவேதான் மற்றவர்கட்கெல்லாம் மூடப்பெற்றிருந்த நிர்மலாவின் அந்தப்புரம், விசுவநாதன் அடிக்கடி அனுமதியின்றியே நுழையும்படி திறக்கப்பட்டிருந்தது. ஆனல், நிர்மலாவின் புனிதமான இருதய கமலம், அவன் பொருட்டு மூடப்பட்டேயிருந்ததென்பதை அவனே, அல்லது அவனுடைய தந்தையோ எப்படி யறிய முடியும்? ஆம் முருகனுக்காகவே அர்ப்பணம் செய்யப்பட்ட அவள் உள்ளத்திலே, அவன் தூய காதலால் பரவியிருந்த அன்பின் அழகை விசுவநாதனே அல்லது அவள் தந்தையோ தம் கண்களால் எவ்வாறு காணமுடியும்?

விசுவநாதன் செல்வச் செருக்கு மிக்கவன். பெண்ணாசை மிகுந்தப் பேய். காமம் நிறைந்த அவனது கண்கள் தன்னைப் பார்க்கும்போது, கொடிபோன்ற நிர்மலா நடுக்கங் கொள்ளுவாள். அவனது நச்சுச் சொற்கள் அவள் காதுகளில் தீயெனப் புகுந்து, உள்ளத்தில் வேலெனப் பாய்ந்துத் தாக்கி வெறுப்பையுண்டாக்கும்.

ஆனல் முருகன்! அவள் முருகன்! அந்தப் பெயர் நிர்மலாவின் உள்ளத்தில் எத்தனை உணர்ச்சிகளை எழுப்பியது! கண்களுக்குப் புலனாகாமலும், ஓசை இன்றியும் வானினின்றிறங்கும் பனித்துளியானது அழகிற்சிறந்த மொட்டுக்களை மலரச் செய்கின்றது. அதுபோல அவ்வழகிய பெயர் நினைவில் வருந்தோறும் நிர்மலாவின் இருதய கமலத்தை மலரச் செய்து மகிழ்ச்சி யூட்டிற்று.

அவன் யார்? அவன்தான், ஏழைகளின் உழைப்பை உறுஞ்சி ஏழடுக்கு மாளிகைகளில் உல்லாச வாழ்க்கை நடத்தும் உணர்ச்சியற்ற கொள்ளைக்காரக்கூட்டத்தின் தலைவன் ஜமீன்தார் ராமசாமிபிள்ளை யிடத்து, பாடுபட்டுழைத்தும் பலன் காணுத பண்ணைப் பணியாள் பரமசிவப்படையாட்சியின் பத்து பிள்ளைகளில் மூத்த மகன். கல்வி கற்கும் கல்லூரியில் நிர்மலாவின் கருவிழிகளால் கவரப்பட்டவன். அதிகம் கூறுவானேன்? அவள் மீது அடங்காக்காதல் கொண்டிருந்தானவன். ஆனல் அவளைத் தன் காதற் பொருளாக மட்டும் கருதினனில்லை. தன் வாழ்க்கைக் குறிக்கோள் என்னும் பயிர் வளர, இன்றியமையாத நீரான தூய அன்பினைச் சுரந்து வளர்க்கும் ஊற்றெனக் கருதினன்.

"என்னை மணப்பதாக நீ வாக்குறுதி செய். நாம் மதுரையை விட்டே, ஏன்? நம் சமூகத்தைக் கடந்தே விலகிச்சென்று விடுவோம். உன் கருவிழிகள் மட்டும் என்னைக் கவர்ந்திருக்கவில்லை; உயர் குணக்குன்றும் உன்னுள்ளமும் என் இத

யத்துள் புகுத்துவிட்டதை உணர்கிறேன். வறுமையிலும், அடிமைத் துயரத்திலும், குடும்பத் தொல்லையிலும், ஆழ்ந்து அவமதிக்கப்படும் என்னுள்ளம். பனிங்குபோன்று களங்கமற்ற உன்னிதயத்துண்டாகும் அன்பினலல்லவா தழைக்கின்றது. என் பிற்கால வாழ்வை—என், இந்நாட்டு மக்களின் வாழ்வையே ஒளிப்படுத்திக் காட்டக்கூடிய நீ, உன் தந்தையின் பொருட்டு, சமூகத்தின் குருட்டு கட்டுப்பாட்டின் பொருட்டு, என் அன்பை நிராகரிக்காதே,'' என்று அடிக்கடி கூறுவான்.

அப்பொழுதெல்லாம் நிர்மலா பதில் கூறமாட்டாள். என்? அச்செய்கையால் எத்தனை இடையூறுகள் விளையும் என்பதை அறிவாள். தன் கடமையை நன்கு உணர்ந்திருந்தாளாயினும், தன் சுக வாழ்வைப் பெரிதாக அவள் எண்ணவில்லை. அவளது பிடிவாதத்தைக் கண்டு முருகன் சில சமயங்களில் சீற்றங்கொள்வான். அச்சமயங்களில் அவள் அவன் கோபத்தை ஆற்றத் தன்னலியன்ற வரை முயல்வாள். "என் ஆழ்ந்த காதலை நீர் அறியவில்லையா?'' என்று கேட்பது போலக் கண்ணீர் மல்கும் கண்களுடன் பிரிவாள். அன்பு ததும்பும் அவள் கருவிழிகள் நீரினல் மறைக்கப்படுவதைக் காணச் சகியான் முருகன். இவ்விதம் சமூகத்தின் முன்னர் கட்டுண்ட காதலரிருவரும் பல சமயங்களில் சகிக்க முடியாத துயரத்தில் ஆழ்ந்து விடுவதுமுண்டு.

அன்று சுதந்திர விழா நடைபெற்றது. விழாவிற்கெனப்பெருந்தொகை நன்கொடையளித்திருந்த ராவ் பகதூரும் நிர்மலாவும் கூட்டத்தின் முன் வரிசையில் அமர்ந்திருந்தனர். அவர்களை யடுத்து விசுவநாதனும் அவன் தந்தையும் இருந்தனர். சொற்பொழிவு நேரமும் வந்தது. மேடைமீது தோன்றினன் இளைஞன் முருகன் பேசுதற்கு. எதிரே தன் வாழ்க்கையின் ஒளி நிர்மலா அமர்ந்திருப்பதைக் கண்ணுற்றுன். உடனே அவனது பேச்சில் ஓர் விறுவிறுப்பு ஏற்பட்டது.

சுதந்தர நாட்டில் மக்கள் பூரண சுதந்தரம் பெற்று வாழவேண்டிய முறைகளையும் அத்தகைய புது வாழ்வு வேண்டுவோர் ஆற்றவேண்டிய பணியையும், அகற்றவேண்டிய நாட்டின் நலிவுகளையும் பற்றி அரிய கருத்துக்களை அடுக்கடுக்காகக் கூறினன். எல்லோரும் எழுகின்ற உணர்வுடன் உற்றுக்கேட்டவண்ணமிருந்தனர். 'இந்நாட்டில் நாட்டின் நலனுக்கென ஜீவநீர் சுரந்தளிக்கும் ஊற்றுக்களாயிருந்து உழைப்பவர் தன்னுணர்வு பெற்றுள்ள கல்வியறிவு விரிந்த ஆடவர்களும் பெண்டிருமாவர். இவ்வூற்றுக்களிலிருந்து சுரக்கும் நன்மை நீர் பொங்கி, பெருகி, உலகெங்கும் பாய்ந்தோட வேண்டும். பணம் பதவி ஆசைகளாலும், சமூதாயக் கட்டுப்பாடுகளாலும், சுயநல சூழ்ச்சியாலும், குருட்டுப்பழக்கத்தாலும், மூட நம்பிக்கையாலும் ஒடுக்கப்பட்டு, வாழ்விழந்துள்ள நம் நாட்டைப் புது வாழ்வு பெற்றுப் புனிதமாயிலங்கச் செய்வதுதான் நம் ஆண் பெண்களின் தொண்டாகயிருத்தல் வேண்டும்'' என்று உணர்ச்சி ததும்பும் குரலில் பேசி முடித்தான் முருகன்.

முருகனின் பொருள் நிறைந்த பேச்சுகள் நிர்மலாவின் உள்ளக்கரையிலே மோதி மோதி அவள் கடமையைக் குத்திக் காட்டின. ஆனல் அதே பேச்சலைகள் அவளது தந்தைக்கு முன் காற்றில் கலந்தனவேயன்றி அவர் செவிகளில் சிறிதும்

நுழையவில்லை. விழா முடிந்தவுடன் நிர்மலாவும் அவள் தந்தையும் தன் மாளிகையை யடைந்தனர். விசுவநாதனும் அவர்களுடன் வந்துசேர்ந்தான். மூவரும் ஒருங்கிருந்தே உணவருந்தினர். நிர்மலாவின் மனத்தில் புதுப்புது எண்ணங்கள் மாறிமாறித் தோன்றி மறைந்தவண்ணமிருந்தன. தன் தந்தையுடன் அடிக்கடி வார்த்தையாடும் விசவநாதனுடன் அவள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. உணவுக்குப் பின், தான் களைப்பின் காரணமாகச் சீக்கிரம் படுக்கப்போவதாகக் கூறிவிட்டு நிர்மலா தன் அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டாள்.

விஷமுள்ள விசுவனும், அன்று விழாவின்போது, முருகனை மேடை மீது கண்ட உடனே நிர்மலாவின் முகத்தில் தோன்றிய மாறுதலாலும், முருகனின் பார்வையாலும், நண்பன் குடிகாரக்குப்புசாமி கூறியவண்ணம் முருகனுக்கும், நிர்மலாவுக்கும் கல்லூரியில் பழக்க மேற்பட்டிருப்பது உண்மையெனத் தீர்மானித்து, தான் மேலே செய்யவேண்டியவற்றைக் குறித்து எண்ணமிட்ட வண்ணம் ராவ் பகதூரின் காரிலே யேறிச் சென்று வீடடைந்தான். மறுநாளே அவர்களின் மணத்தைக் குறித்துப் பேசப்பட்டு—ராவ்பகதூரும் விரைவில் மணம் முடிப்பதாக வாக்குறுதி யளித்தார். ஏதோ ஆழ்ந்த யோசனையிலீடுபட்டவாறு சோபாவிலமர்ந்திருந்த நிர்மலாவினருகில்வந்தமர்ந்த தந்தை அவளிடத்தில், மிக மகிழ்ச்சியோடு இதைக் கூறலானார்.

அவர் கூறிய ஒவ்வொரு சொல்லும், வெந்தபுண்ணில் வேல்விடுவது போன்றிருந்தது நிர்மலாவிற்கு. தன் வெறுப்புக்கு ஆளானவனும், தீய குணங்கள் கொண்டவனும், காமப் பேயனுமான விசுவநாதனை வாழ்க்கைத் துணைவனாகக்கொண்டு வாழ எப்படி அவள் ஒப்பமுடியும்? குணக் குன்றாம் இளங்காளை முருகனது அன்புமிக்கநட்பெங்கே? பெண் பித்தனாகிய விசுவனின் நிலையில்லா அன்பு எங்கே? என்று பலவித எண்ணங்கள் அவள் மனத்தை வாட்ட ஆரம்பித்தன.

ஒருபுறம் அன்பு மிக்கத்தந்தை; மறுபக்கம் பழி தூற்றும் சமூகம். இவற்றிற் கிடையே தன் வாழ்வின் பெருநோக்கம்—புனிதமான காதல். என்ன செய்வாள் பாவம். பெண் பேதை, ஆனால் அவசரக்கார ஆடவரைக் காட்டிலும் பன்மடங்கு கூரிய அறிவுத்திறனமைந்த பெண்ணாகிய நிர்மலா நிதானமாகத் தன் தந்தையை நோக்கினாள். "அப்பா! இவ்வளவு நாட்கள் தங்களிஷ்டப்படி நான் விசுவநாதனுடன் நெருங்கிப் பழகி வந்தேன் ஆனால், உடன் பிறந்தாரற்ற நான் அவரை ஓர் தமையனாகவே கருதி வந்தேன். மேலும் அவருடைய குணங்களும், பழக்க வழக்கங்களும் என் அருவருப்பை அதிகப்படுத்தினதேயல்லாமல்அன்பைப்பெருக்கவில்லை. ஆதலால், தமையனாகப் பாவிக்கவே வெறுப்பூட்டும் அவரைக் கணவனாக ஏற்றுக்கொள்ள, என் மனம் இடங்கொடாது. அதுவுமன்றித் தாங்கள், தங்கள் ஒரே மகளின் விருப்பப்படி அவளது வாழ்க்கை அமைவதைக்கூட விரும்பவில்லையா? என்றாள். அவள் கண்களில் நீர் அரும்பியது!

எதிர் பாராத பதிலினால், வியப்போடும் கோபத்தோடும் வேகமாக மூச்சுவிட்டுக்கொண்டிருந்த ராவ் பகதூர் அகலவிழித்தவாறு "நீ இவ்வளவு துணிவோடு இன்றையதினம்

நான் சொல்லுவதை மறுத்து ஏதோ மனைதைப்பற்றியும், இடங்கொடாத தைப்பற்றியும்பேசக்காரணமென்ன? என்றையதினம் உன்னைக் கல்வி கற்க அனுமதியளித்தேனே அன்றே இவ்விதம் ஒரு நாள் வருமென்று விசுவனின் தந்தை எச்சரிக்கை செய்தது உண்மையாயிற்று" என்றிரைந்தார்.

நிர்மலா. சற்று தைரியத்துடன் "அப்பா! ஏன் கல்வியின் பண்பறியாது கல்வியைக் குறைகூறுகின்றீர்? என் துணிவிற்குக் கல்வி மட்டும் காரணமல்ல. என்னிளமை நிறைந்த உள்ளம் வேறோர் இளமை ததும்பும் அழகிய வாலிபன் உள்ளத்தால் கவரப்பட்டதே முக்கிய காரணமாகும்! இதுவரை அதைப்பற்றித் தங்களிடம் கூறாமைக்கு மன்னிக்கவும்" என்றாள்.

உடனே ராவ் பகதூர் இருந்த இடத்தினின்று குதித்தெழுந்து, "நிர்மலா நீ என்னைப் பைத்தியக்காரனாக்கப் பார்க்கிறாய். உண்மையில் அவ்வாறு, எனக்குத் துரோகம் இழைக்க இவ்வூரில் ஒருவனும்இருக்கிறானா? அத்தகைய பாவத்திற் கஞ்சா பழிகாரன் யார்? உடனே கூறு" எனத்துடித்தார்.

தந்தையின் கொடுமை நிறைந்த முகத்தைக்காணச்சகியாதவள்போல், குனிந்திருந்த நிர்மலாவின் வாயிலிருந்து "அவர்தான் என் கல்லூரித் தோழர் முருகன். அவர் பாவத்தையும் பழியையும் ஏற்றுக்கொண்டிருப்பவரானால் அவர் அன்பை வேண்டிப் பெரும் பாக்கியம் பெற்ற உம் மகளான யான் மட்டும் பழியேற்காதவளாக ஆகிவிடுவேனோ" என்ற சொற்கள் பதிலாக வந்தன.

ஆத்திரத்தால் துடிக்கும் ராவ் ராவ்பகதூர் "நிர்மலா இது உனக்குத் தகுந்ததா? அந்தத் தரித்திரம் நீ நினைக்கவும் அருகதையுள்ளவனா? பேசாமல் நான் சொல்வதைக் கேள். ஜமீன்தாருக்கோ உறுதிமொழி கொடுத்துவிட்டேன். நம் நிலையென்ன? குலமென்ன? அதுவும் ஜமீன்தாரின் வாரிசான கட்டழகு நிறைந்த காளையைவிட்டு, அவரது பண்ணைக்காவலன் மகனையா நீ காதலிப்பது? அதுவே நம் குலத்தைப் பழிக்க போதுமே என்பதை மறந்தாயா? ஐயோ! நான் எவ்வாறு இப்பழியை நீக்குவேன்? பரம்பரையாகப் பழுதின்றி வாழ்ந்துவந்த என் குடும்பம் என் மகளினாலா இப்பெரும் பழியை ஏற்கவேண்டும்? அது மட்டுமா? மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு விசுவுக்கும் அவ்வறபனுக்கு மிடையே யிருப்பதை நீ காணவில்லையா? வயிற்றுக்கில்லாத வறண்ட கல்வியாலென்ன பயன்? கொஞ்சம்யோசித்துப் பாரம்மா! ஒரு வாரத்தில் உன் முடிவைச் சொல்!" என்றுகூறித் தன்னறைக்குச்சென்றுவிட்டார், தந்தை.

நிர்மலாவும், "நடப்பது நடந்தே தீரும், ஆனால் எதுவரினும் என் மனம் மட்டும் வைரம்போன்ற வன்மையுடையதாகத் தானிருக்கும்" என்று கூறிக்கொண்டவளாய்த் தன்னறைக்குச்சென்றாள். தந்தை கூறிய ஒரு வாரமும் ஏதும் நடைபெறாது முடிந்தது. இந்த வாரம் முழுவதும் தந்தையும் மகளும் உணவு கொள்ளும்போது மாத்திரமே சந்தித்தனர். ராவ் பகதூர் தன் அலுவல் காரணமாக அடிக்கடி வெளிச்செல்பவர், ஏதோ ஆழ்ந்த யோசனையோடும் சில சமயங்களில் ஏதோ தன் காரியத்தில் வெற்றியடைந்தவர்போலவும் வீடு

லம் வருவார். எனினும் இருவர் மனமும் ஒரே நிலையிலிருக்கவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. ராவ் பகதூர் நிர்மலாவின் அறைக்குள் அவசரமாக நுழைந்தார். நிர்மலா படுக்கையின் மீது சாய்ந்த வண்ணம் வெளியே நோக்கிக்கொண்டிருந் தாள். எவ்வளவு சீக்கிரம் மாறிவிட் டாள் நிர்மலா. ஒரு வாரத்திற்குள் ளாகவா இத்தகைய மாறுதல்கள் அவளிடம்! தந்தையின் மனதிற்குள் ஏதோ ஒன்று அவர் செய்வது சரி யல்லவென்று சொல்லுவதுபோல வேதனை யுண்டாக்கியது. அவளருகி லமர்ந்த அவர், அவள் கைகளைப் பிடித்த வண்ணம் "நிர்மலா! ஏன் உன் மனதையும் உடலையும் ஆகாத காரியம் குறித்து அனுவசியமாக அலட்டிக்கொள்கிறாய்? அநியாயமாக உன் வாழ்க்கையில் குறுக்கிட்ட அச் சண்டாளனை ஒழித்துவிட்டேன். அத்துஷ்டன் செய்த அநீதசெயலின் பயனாக அன்றிரவே அவன் தந்தை பரமசிவம் வேலையினின்று விலக்கப் பட்டான். அவனும் எளிய குடும்பத் திலே பிறந்த தன் மகன் பெரிய வீட்டுப் பெண்ணை நினைத்தக் குற்றத்தால் குடும்பத்திற் குற்ற கேடு களை எண்ணியும், அவமானத்திற் கஞ்சியும் அவனை அன்றே வீட்டை விட்டுத் துரத்தியது மன்றி அவன் கைப்பட இனி அந்தப் பெண்ணைக் கனவிலும் கருதுவதில்லை என எழுதியும்வாங்கிக்கொண்டுவிட்டான் அப்பயல் இரவோடுஇரவாய் எங்கோ சென்றுவிட்டான். "அடாது செய் பவன் படாது படுவான்" பார்த் தாயா? அவன் கோழைத்தனத்தை. அவன் குடும்பம் பிழைப்பின்றி வறு மையால் இனி வருந்தவேண்டும். ஜமீனை விட்டே போய்விடவேண்டு மென சிறிதும் மனவிரக்க மின்றி மொழிந்தார் தந்தை.

தந்தையின் சொற்கள், இள வேனிற் காலத்து பசுமை தேங்கி யிருந்த பச்சை மரத்தில் விழுந்த பேரிடியைப்போலிருந்தது. நிர்மலா வுக்கு "என் உள்ளத்திலிருந் தொங்கி வரும் அன்பு வெள்ளத்தை என் மனதைக் கொள்ளைகொண்ட உத்தமன் பாதத்தில் கொட்டிப்பூஜிப் பதைத் தடுக்க இவர் யார்? இச்சம யத்தில் என் அன்பின் பீடமாக விளங்கிய அவரும் இப்படி மாறக் கூடுமா? எதற்காக வீட்டைவிட்டு ஓடவேண்டும்? அவர்தன்னிடம் அன் பின் அடைக்கலமாகப் புகுந்த பெண்ணை நேசித்தது குற்றமா? காதல் புரிவதுபாவமா? பழியாகுமா? அப்படியானால் ஜன்மம் எடுப்பது பாவமா! பிழைத்திருப்பது தவறா? இறப்பது தவறா? இவை யனைத்தும் தவறல்லவானால் காதல் புரிவது மட் டும் எப்படி தவறாகும்? இவ்வாறலைந் தது அவள் மனம். சற்று தாமதித்து "தந்தையே! நான் வேண்டுவது பொருளல்ல. அந்தஸ்தல்ல. கிட்டாத பெரும் பாக்கியமாகும் ஓர் புனித மான ஒப்பற்ற மனிதரின் காதலை வேண்டிப்பெற்றேன். அதை இழக்க எனக்கு மனமில்லை. என் செயலுக்கு அவரா குற்றவாளி? இதயத்தில் காதல் உண்டாகும்போது அது யாரையும் கேட்டு உண்டாவதில்லை. அது வெள்ளத்தைப்போல் பெருகு கிறது. அலைபோல் கொந்தளிக்கிறது அப்போது விவேகம் அதைத் தடை செய்ய முடிவதில்லை. சமூகத்தால் அதற்கு அணைபோட முடிவதில்லை. காதல் வெள்ளம் கரை புரண்டு பெருகிவரும்போது, ஜாதி, சமயம், பரம்பரை வழக்கம், முதலிய மேடு களின் மீது மோதி அடித்துக் கொண்டு சென்று கடைசியில் தன் இலட்சிய சாகரத்தில் கலக்கிறது. இது இயற்கை! இந்தக் கபட சமூகக் கட்டுப்பாட்டுக்கு அஞ்சுவதில்லை.

ஆகவே என்னை மன்னிக்கவேண்டும். காதல் புரிவது ஓர் வியாபாரமல்ல அப்பா! என் மனதை வேறொருவரிடம் திருப்ப முயல்வது கடலில் சிறு பெருங் காயத்துண்டைக்கரைப்பதற்கொப்பாகும். என் கற்பனை உலகத்தின் ஒளியாகப் பிரகாசித்த அவர், என் வாழ்க்கையின் இன்னிசையில் ஓர் அபஸ்வரத்தை உண்டாக்கிவிட்டாரெனினும் என் மனவுறுதி மட்டும் தளராது. என் கற்பனை உலகம் இடிந்து சிதைந்தபோதிலும், என் வாழ்க்கை இலட்சியம் சிதையவில்லை. ஆகவே, இனி, என்றென்றும் சமூகக் கட்டுப்பாட்டிலடங்காது கன்னிகையாகவே காலங்கழிக்க இன்றே என் காதல்மீது ஆணையிட்டு உறுதிகொண்டு விட்டேன் இனி எதற்கும் கலங்கப்போவதில்லை. மேலும்என்னை வருத்தாதீர்!" என்று தீர்மானமாக மொழிந்தார் நிர்மலா.

பெரியதோர் புயலடித்தது. புயலுக்குப்பின் ஓர் அமைதி. இரண்டே மாதங்கள் இந்நிகழ்ச்சிக்குப் பின் உருண்டோடியிருக்கின்றன. ஆனால் அதற்குள் எத்தனை மாறுதல்கள்.ராவ் பகதூர் மகளின் துணிவின் முன் துரும்பாயினர். அதனாலேயே மனத்தளர்வுற்று, மெலிவடைந்து வெகு சீக்கிரத்தில் மார்புநோய் கண்டு தன் மகளைத் தனி வாழ்வு நடத்த விட்டு விட்டு இவ்வுலகை விட்டு மறைந்து விட்டார்.

நிர்மலா தன் செல்வமனைத்தையும், சுதந்திரம் பெற்றும், நாட்டின் பிணியெனக் காட்சியளிக்கும் ஏழைகளுக்கென செலவிட பல திட்டங்கள் வகுத்துக்கொண்டு, உண்மையான பயனளிக்கக்கூடியதேசசேவையில் ஈடுபட்டாள்.

பணத்திற்கென பருந்துபோல் வட்டமிட்டுக்கொண்டிருந்த விசுவும் அவன் தந்தையும், நிர்மலாவின் முன் தம் பகட்டைக் காட்ட அஞ்சி விலகி, தம் கருத்தை வேறு பக்கம் செலுத்தலாயினர். ஆனால் படையாச்சி பரமசிவத்தின் நிலையோ வெனில் துயரமிகுந்ததாயிருந்தது. குடியிருக்கக் குடியின்றி, தவிக்கும் பெரிய குடும்பஸ்தன் ஆகிய அவன், தன் குடும்ப நிலை யறியாது பெரியவர்கள் வீட்டுப் பெண்ணை நினைத்துக் குற்றத்திற்காளாகி அதனால் குடும்பத்திற்கே இத்தகையக் கேட்டினைக் கொணர்ந்த முருகனை அச்சமயத்தில் கடிந்து துரத்தியபோதிலும், மனதில் ஓர் இன்னதென்றறியாத வேதனையால் வெந்துக்கொண்டிருந்தான். உறவினராதலில் குடும்பத்தை சில நாட்கள் குடும்பத்தை வைத்து விட்டு பிழைப்பதற்கோர் வழி தேடலாயினன்.

வீட்டை விட்டு வெளியேறிய முருகனே எதிர் பாராத இடுக்கண்ணினால் உலகத்தையே வெறுத்தான். எண்ணமாட்டாத பல எண்ணங்களுடன் தன் மனம்போன போக்கில் ஊணுறக்கமின்றிப் பல நாட்கள் நடந்து ஒவ்வொரு ஊராகச் சென்றுக்கொண்டிருந்தான். எங்கு சென்றபோதிலும், என்னத்தொழிலீடுபட்டபோதிலும் உலகமே பாழடைந்ததாகத் தோன்றியவனுக்கு. பித்தன் போலாயினன் அவன். நிர்மலாவைக் காணாது அவனால் இருக்க முடியவில்லை. அவன் கண்கள் அந்த அழகிய கரு விழிகளைத்தேடி அடிக்கடி அலையலாயின. அவனது மாசுமறுவற்றக் காதலின் பிரவாகம் தணிந்ததாகக் காணப்படவில்லை. சூழ்ச்சி நிறைந்த சமூகத்தின் முன் தன் வாழ்க்கை நோக்கம் சிறிதும் சிதைந்ததாகத் தோன்றவில்லை. மீண்டும் மதுரையை நோக்கி நடைபிணம்போல் நடக்கலாயினன்.

என்றும் போல் குளிர்ந்ததென்றலும் ஓடைகளின் ஓசையும் இன்னிசை யெழுப்பிக்கொண்டிருந்தன. சௌந்திரியமும் சாந்தமும் நிலவிய முகப் பொலிவுடன் தூய வெள்ளாடை யணிந்து ஒரே முத்துவடம் தன் கழுத்தை அலங்கரிக்க தலைவாரி முடியிடம்பெற்று, அழகிய நெற்றியில் விளங்கும் சிறு குங்குமப்பொட்டுடன், கையில் ஓர் பை நிறைய ஏதோ எடுத்துக்கொண்டு, ஓர் ஆள் கூடை நிறைய பல முடிப்புக்களையும், பொட்டலங்களையும், எடுத்துக்கொண்டு பின்னே தொடர்ந்து வர ஏழை மக்கள் வாழும் குடிசைகளை நோக்கி நடந்துகொண்டிருந்தாள் நிர்மலா. தினந்தோறும் காலையில் இளவெயில் நிர்மலா இங்கு வருவதை எல்லோரும் கண்டு அவளது உதார குணத்தைப் போற்றிச செல்வர்.

இன்று, திடீரென ஓர் மெலிந்த வுருவம் தன் பெயர் சொல்லியழைப்பதைக் கேட்டதும், நிர்மலா மேலே செல்லாது அவ்வேலைக்காரனைச் செல்லும்படி செய்கையால் உத்தர விட்டு விட்டு தயங்கி நின்றாள். சடுதியில் அவ்வுருவம் முருகனென்பதை யுணர்ந்தாள்.

இப்போது முருகன் அவளுடைய பழைய முருகனல்ல. அவனிடமிருந்த பொறுமையும், நிதானமும் இப்போது அவனை விட்டு ஓடிவிட்டன. அவன் அவளைத் தழுவமுயன்றான். "அந்த அழகிய கண்களால் என்னை ஏறிவிட்டுப் பாரேன்" என்று கதறினான். அவள் அவன் பிடியை விலக்கி விட்டாள்!

"உன் கண்களால் என்னை வசீகரித்துவிட்டு இப்போது தள்ளாதே" என்றான் அவன். "தங்கள் அன்பு உண்மையாயிருக்குமாயின் என்னை, என் உடலை மறந்து விடுங்கள்! காதல் பெரிது! ஆனால் கடமை அதைவிடப் பெரிது! இவ்வுலகில், இக்கொடிய சமூகத்தின் முன் உண்மைக் காதலரின் முதலென்ன? சமூக சந்தோஷத்திற்காக சமூகப் பல பீடத்தில் காதல் பலியாகிறது! ஆயினும் உண்மை உள்ளங்களின் லட்சியம் என்றென்றும் மாறுதலடையாது! நான் எதையும் கூற விரும்பவில்லை ஆனால் என்னை மறந்து விடுங்கள் என்பதே நான் உம்மை வேண்டிக்கொள்கிறேன். காதல் உலகிலிருந்து கடமை உலகிற்குச் சென்றுகொண்டிருக்கிறேன்! தடை செய்யாதீர்கள்!" என்று சொல்லிக்கொண்டே பதிலை எதிர் பாராமல் அங்கிருந்து செல்ல வாரம்பித்தாள்.

பித்தன்போல் பிதற்றிய வண்ணம் நின்ற முருகன், அவளது வைரம் பாய்ந்த வன்மையின் முன் தள்ளாடி நின்றான்.

"நீ செல்லுமிடத்திற்கு என்னையும் அழைத்துச்செல்லக்கூடாதா?"

"முடியாது! சாந்தியை நாடிச்செல்லும் ஏழைகளின் இதயத்துள் தாங்கள் ஏன் வரவேண்டும்?"

"எனக்கும் அந்த சாந்தி கிடைக்கக் கூடாதா?"

"தாங்கள் விரும்பினால் வேறு இடத்திற்குச் செல்லுங்கள். காதலால் கட்டுண்ட நம் உள்ளம் மீளவும் மாசுபடியவேண்டாம்."

"ஐயோ! பெண்மையின் வன்மை ஆண்மையையும் நடுங்கும்படிச் செய்கின்றதே. என் அன்பின் அணங்கே! உன் வாழ்வை இப்படியா சமூகக் கொடுமையால் பாழாக்கிக்கொள்ள வேண்டும். சமூக அனலின் முன், மலர்ந்து மணம் வீச வேண்டிய மலரை மொக்கிலேயே கசக்கிவிட்டாயே." என்று உடைந்த வுள்ளத்துடன் கேட்டான் முருகன்.

"அதைப்பற்றிப் பேசி பயனில்லை. என் வாழ்வின் சுகத்தையிழக்க நான் வருந்தவில்லை. உங்களைக் காதலித்த இருதயத்தை நான் இழக்கவில்லை. உங்கள் மீது கொண்ட அன்பு என்றும் மாறாது. அதுவே எனக்குப் போதுமானது!" என்று சொல்லிக் கொண்டேசென்று விட்டாள் நிர்மலா.

ஒரு பெண்ணுக்கிருக்கும் வன்மை கூட அவனுக்கில்லை. தள்ளாடிய மனதோடும், தன்னுணர்வற்ற உடலோடும் தரணியின் மீது தனியே தான் விடப்பட்டுவிட்டதாக எண்ணினான். உலக நிகழ்ச்சிகளில் ஆண்மை மிக்க ஆடவரின் அறிவை துலக்கி, அவனியில் ஆண்மை விளங்க செய்வது பெண்மை யென்பது ஆழ்ந்து காண்பவர் அறியும் செய்தி. தனியே விடப்பட்ட முருகன் தரணியின்மீது சாந்தியை நாடிச்செல்ல அவ்விடம் விட்டு பிரயாணமானான். அவன் மனதில் ஏதோ ஒன்று. நிர்மலா, இவளே மனங்கடந்த மங்கை, இவளே மாசற்ற மலர். ஆனால் எல்லோரு மறியும் வண்ணம் சாதாரண மாக வெளிப்படாது உள்ளங்களின் ஊடே ஒளி வீசி மறையும் மாசற்ற மலராகவல்லவோ ஆகிவிட்டாள்' என்று ஒலித்துக்கொண்டே யிருந்தது.

நாட்கள் ஓடி மறைந்தன! அனுவலின் காரணமாகவோ, ஆடவரின் ஆட்டங்காட்டும் மனப்பான்மையினாலோ அல்லது உலகப்போக்கின் காரணமாகவோ, கொஞ்ச நாட்களில் முருகன் நிர்மலாவின் நினைவே இல்லாதவனாய், அவளை மறந்தே விட்டானென்று கூறலாம்.

ஆனால் நிர்மலாவின் இதயத்தில் மட்டும், அதில் பொறிக்கப்பட்ட முருகன் என்றசொல் மறையவில்லை! அவளது நிர்மலமான மனதில் முருகனது நினைவு நிலைபெற்றிருந்தது! அவளுயிருள்ளவரை அது நிலையூன்றித்தானிருக்கும்! ஏன்? அவளும் ஒரு பெண்தானே!

மதிப்புரை:-

அறிஞர் அண்ணாதுரை

(தொகுப்பு நூல்)

அறிஞர் அண்ணாதுரை, இன்று தமிழகத்தின் வீடுகள் ஒவ்வொன்றிலும் உச்சரிக்கப்படும் பெயர். அவரைக்குறித்து, வெவ்வேறு துறைகளிலும் மாறுபட்ட கட்சிகளிலும் வேறுபட்ட நிலைகளிலும் உள்ள ஒவ்வொரு, தலைவரும், அறிஞரும், கலைஞரும் என்ன எண்ணுகின்றனர் என்பதை யறிய, தமிழ்மக்கள் விரும்புகின்றனர்.

அந்த விருப்பத்தை நிறைவேற்றும் நன்னோக்கத்தோடே-இத் தொகுப்பு நூல் வெளி வந்துள்ளது. மாறுபட்ட கருத்து கொண்டவர்களும்-அவரது அரிய திறனைப் புகழத்தவறவில்லை. அறிஞர், அண்ணாதுரையின் தோற்றத்தை ஒவ்வொரு கோணத்திலிருந்தும்-இந்நூலின் மூலம் கண்டு மகிழலாம். மூவர்ண நிறத்தோடு நின்று, காண்போரைக் கவரும் அட்டையோடு-திராவிடப் பாசறையின் முதல் வெளியீடாக இது மலர்ந்துள்ளது. கிடைக்குமிடம்:

பாரி நிலையம்,
59, ப்ராட்வே, சென்னை. 1.

Edited and Published by K. Anbazhagan M. A., at 10, Vellala St., Purasapakkam, Madras-7
Printed by K. V. T. Srinivasan at Sree Ranga Press, 1, Rajahanumanrhalala St. Madras-5.

புது வாழ்வு

(மாத வெளியீடு)

விலை விவரம் :—

	உள்நாடு (இந்தியா, இலங்கை)	வெளிநாடு (பர்மா, மலேயா முதலிய இடங்கள்)
தனி இதழ்	அணா 4	அணா 5
ஆண்டுக் கட்டணம்	ரூ. 3	ரூ. 4

(ஒரு ஆண்டுக்குக் குறைவாகச் சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

விளம்பர விகிதம் :—

அட்டை வெளிப்பக்கம்	ரூ.	120
,, உள்பக்கம்	,,	80
உள்பகுதி முழுப்பக்கம்	,,	60
,, அரைப்பக்கம்	,,	30
,, கால்பக்கம்	,,	20

தொடர்ந்து விளம்பரம்செய்ய விரும்புவோர் விவரங்கட்கு எழுதுக.

கடலூர், நாகை, ஈரோடு, பட்டுக்கோட்டை, வந்தவாசி, விருதுநகர், சிவகாசி, சாத்தூர், முதலிய ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

மற்ற விவரங்கட்கு :— நிர்வாகி,

புது வாழ்வு

10. வேளாளர் தெரு,

புரசைபாக்கம் :: சென்னை—7.

Wrapper Printed at The Oriental Printing Works, Madras.